# ஜனாதிபதித் தேர்தல் சட்டம்

MR. SIVA. JOTHILINGAM
B.A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Good Shepherd Convent,
COLOMBO 13

ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கத்தின் வெளியீடு.

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

# ஜனாதிபதித் தேர்தல் சட்டம்

வெளியீடு:
**வண. பட்டபொல நந்த தேரர் - செயலாளர்**
*ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கம்,*
*51/7 இராஜகிரிய வீதி,*
*இராஜகிரிய.*

பதிப்பாசிரியர்கள்:
**ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கத்தின் சட்டப்பிரிவு**

முதல் அச்சுப்பதிப்பு - ***1994* ஒக்டோபர்**

கணணிப் பதிப்பு:
டெக்னோ பிரின்ட்
**6, ஜெயவர்தன மாவத்தை,**
தெகிவளை

அச்சுப் பதிப்பு:
**நவகம**
***334*, காலி வீதி,**
**இரத்மலானை**

MR. SIVA. JOTHILINGAM
B A (Hons) Po-Sc., Dip-IN-IA (BCIS),
Teacher,
Goodshepherd Convent,
COLOMBO-13.

# முன்னுரை

நீதியான தேர்தல் மக்களின் உரிமையாகும். தேர்தல் சட்டங்களைப் பற்றி பலரும் அறிவது மூலம் வாக்குரிமையை உரிய முறையில் பயன் படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தவறுகள் இடம்பெறும் ஒரு சமூகத்தில், அத்தவறுகளைச் சரியாக அடையாளம் காண்பது மூலமே அவற்றைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல்களைப் பற்றியும், பொதுத் தேர்தல்களைப் பற்றியும் ''தேர்தல் சட்டங்கள்'' என்ற தலைப்பில் நூல்வடிவில் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான சட்டத்தை இச் சிறு நூல் வடிவில் சமர்ப்பிப்பது மூலம், நீதியான சுதந்திரமான தேர்தலுக்கு அவசியமான சமூகச் சூழலை உறுதிப்படுத்துவதற்கு உங்களுக்குத் தேவைப்படும் ஊக்கத்தையும், சக்தியையும் நாம் வழங்குகின்றோம். மக்களின் வாக்குரிமைக்காக நாடு பூராவும் செயற்படும் இத்தகைய இயக்கத்திற்கு மாத்திரம் எம்மை வரையறுத்துக் கொள்ளாமல் தேர்தலுக்குப் பின்னரும், மக்களின் உரிமைகளுக்காகச் செயற்படும் ஓர் இயக்கத்தைக் கட்டியெழுப்புவது அத்தியாவசியம் என்பதே எமது நம்பிக்கை ஆகும்.

ஜனநாயக உரிமைகளை

வென்றெடுப்பதற்கான இயக்கம்

1994.10.12

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | நீதியான சுதந்திரமான தேர்தலுக்காக | 01 |
| 02. | வாக்காளர்கள் வாக்குகளைப் பிரயோகித்தல் | 02 |
| 03. | வாக்குச்சீட்டில் புள்ளடி இடுதல் | 04 |
| 04. | வாக்கெடுப்பு நிலையத்திற்கும் பதிலாக பிறிதோர் இடத்தில் வாக்களிப்பு | 05 |
| 05. | வாக்களிப்பதற்கு விடுமுறை வழங்குதல் | 06 |
| 06. | வாக்கெடுப்பு நிலையத்திற்கான முகவர் செயற்பட வேண்டிய முறை | 07 |
| 07. | தேர்தல் குற்றங்கள் | 14 |
| 08. | தேர்தல் சட்டத்திற்கு அமையத்தவறுகள் | 15 |
| 09. | வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும் நாளில் தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள் | 16 |
| 10. | ஊர்வலங்கள் | 17 |
| 11. | பொதுக்கூட்டங்கள் | 17 |
| 12. | தேர்தல் காரியாலயங்கள் | 18 |
| 13. | தேர்தல் சின்னங்களைக் காட்சிக்கு வைத்தல் - வாக்களிக்கும்படி இரந்து கேட்டல் | 19 |
| 14. | தேர்தல்களில் இரகசியம் பேணல். | 20 |
| 15. | ஊழல் பழக்கங்கள்– ஆள்மாறாட்டம் உபசாரம் செய்தல், தகாத செல்வாக்கு இலஞ்சம் வழங்குதல் | 21 |
| 16. | ஊழல் நடவடிக்கைகளுக்கான தண்டணைகள். | 23 |
| 17. | சட்ட விரோதமான நடவடிக்கைகள் | 24 |
| 18. | தேர்தல் உத்தியோகத்தர்களின் கடமையும் பொறுப்பும் | 25 |
| 19. | தேர்தல் தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் கடமைகள் | 26 |
| 20. | வாக்கு எண்ணும் நிலைய முகவர்களின் பொறுப்பு | 30 |
| 21. | தபால் வாக்குகள் | 33 |
| 22. | பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளும் பொறுப்புகளும் | 36 |

## நீதியான சுதந்திரமான தேர்தலுக்காக....

ஊழல்கள் மோசடிகள் அற்ற ஒரு நீதியான-சுதந்திரமான தேர்தல் எப்போதும், வாக்காளர்களுக்குச் சாதகமாகவே அமையும். ஆதலால், வாக்காளர்களும், வாக்கெடுப்பு நிலையங்களின் முகவர்களாகச் செயற் படும் அரசியற் கட்சிப் பிரதிநிதிகளும் தேர்தல் உத்தியோகத்தர்களும், நீதியான சுதந்திரமான தேர்தலை வென்றெடுக்கச் செயற்படுவது இன்றி யமையாததாகும்.

**எவரேனும், தேர்தல் குற்றத்தைப் புரிவதைக் கண்டால் அதைத் தடுப்பதற்கு அல்லது அதனை அறிவிப்பதற்கு உடனடியாகச் செயற் படுவது எமது இன்றியமையாக் கடமையாகும்.**

1994 நவம்பர் 09ஆம் திகதி இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்காளர்கள், போட்டியிடும் வேட்பாளர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், தேர்தல் உத்தியோகத்தர்கள் என்போர் அனுசரிக்க வேண்டிய விதிமுறைகளைப் பற்றியும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தைப் பற்றியும் அறிவூட்டுவதே இச்சிறு பிரசுரத்தின் குறிக்கோளாகும். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பின்வரும் சட்டங்கள் ஏற்புடையவை:

1. 1981 இன் 15ஆம் இலக்க ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப் பதற்கான சட்டம்.
2. 1988 இன் 16ஆம் இலக்கச் சட்டத்திருத்தங்கள்.
3. 1988 இன் 35ஆம் இலக்கச் சட்டத் திருத்தங்கள்
4. 1978 இன் அரசியலமைப்புச் சட்டம்.

1981 இன் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தை பிரதானச் சட்டமாக நாம் அறிமுகப்படுத்துகின்றோம். குறிப்பிட்ட விடயங்களைப் பற்றிய வாசகங்களை நாம் குறிப்பிடும் போது பிரதான சட்டத்தின் வாசகங் களையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளோம்.

## வாக்காளர்கள் வாக்குகளைப் பிரயோகித்தல்

- ★ வாக்காளர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமை வாக்குரிமை பற்றிய தீர்க்கமான காரணியாகும்.
- ★ 1994 ஜனாதிபதித் தேர்தலுக்கு 1993ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படுகின்றது.
- ★ இத்தேர்தல் இடாப்பில் பெயர்களைச் சேர்த்தல்-திருத்துதல் என்பன ஒவ்வொரு ஆண்டும் யூன் 01ஆம் திகதி ஆரம்பமாகும். ஒக்டோபர் 31ஆம் திகதி இது தொடர்பான எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதற்கான கால அவகாசம் முடிவடையும். ஆதலால் குறிப்பிட்ட கால எல்லையுள் வாக்காளர் இடாப்புக்களைப் பரிசீலனை செய்து தமது பெயர்களை அவற்றில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் சகல பிரஜைகளினதும் கடமையாகும்.
- ★ 1994 ஜனாதிபதித் தேர்தலுக்கு, 1993 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பிற்கு அமைய தகைமை பெற்றோருக்கான உத்தியோக பூர்வ வாக்கெடுப்பு அறிவிப்பு அட்டைகள் தேர்தலுக்கு முன்னர் தபால் மூலம் கிடைக்கும்.
- ★ உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவிப்பு அட்டைகள் தபாலில் கிடைக்காவிட்டால் உரிய தபால் கந்தோருக்குச் சென்று தமது அடையாளத்தை நிரூபித்து மேற்படி உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவிப்பு அட்டையைப் பெறும் உரிமை வாக்காளருக்கு உண்டு.
- ★ குறிப்பிட்ட தபால் கந்தோர் உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவிப்பு அட்டையை அதில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு மாத்திரம் வழங்க வேண்டும். அதனை வேறு நபருக்கு வழங்குவது சட்ட விரோதமாகும்.
- ★ விநியோகிக்க முடியாத உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவிப்பு அட்டைகள் குறிப்பிட்ட தபால் கந்தோரில் வைத்திருத்தல் வேண்டும். உரிய நபர் வந்து கேட்குமிடத்து அதனை ஒப்படைக்க வேண்டும்.
- ★ ஒரு குறிப்பிட்ட பிரஜைக்கு உரித்தற்ற வேறு நபருக்குரிய வாக் கெடுப்பு அறிவிப்பு அட்டையை தம் வசம் வைத்திருத்தல் சட்ட ரீதியாக தண்டணை பெறக்கூடிய விடயமாகும்.

- ★ உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவித்தல் அட்டை வாக்கு அளிப்பதை இலகுபடுத்துகின்றதே தவிர வாக்களிப்பதற்குக் கட்டாயம் அவசியமான ஓர் ஆவணம் அல்ல.
- ★ உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவித்தல் அட்டை இன்றியும் வசக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்கும் உரிமை வாக்காளருக்கு உண்டு.
- ★ காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகும். ஆகையால் காலையிலேயே தமது வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பதால் தமது வாக்கு வேறு ஒரு நபரால் மோசடி செய்யப் படுவதைத் தவிர்க்க முடியும். வாக்களிப்பு மாலை 4 மணிக்கு முடிவடையும். ஆதலால் மாலை 4 மணிக்கு முன்னர் நீங்கள் வாக்குச் சீட்டைப் பெறாதுவிட்டால் உங்களுக்கு வாக்கு அளிக்க சந்தர்ப்பம் கிட்டாது.
- ★ உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவித்தல் அட்டை இருந்தால் வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் சென்று அதனைச் சமர்ப்பிப்பது மூலமோ அல்லது உத்தியோகபூர்வ வாக்கு அறிவித்தல் அட்டை இல்லாவிட்டால் தனது பெயரை அறிவிப்பது மூலமோ வாக்குச்சீட்டு ஒன்றைப் பெறும் உரிமையை வாக்காளர் பெறுகின்றார்.
- ★ வாக்கெடுப்பு நிலையத்தில் மேற்படி தேர்தல் உத்தியோகத்தர்களிடம் கலந்துரையாட வேண்டாம். ஏதாவது ஆலோசனை பெறும் அவ சியம் ஏற்பட்டால், வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பான தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் அதுபற்றி விசாரிக்கவும்.
- ★ வாக்கு அளிப்பதற்கு முன்னர் தனது இடது கை சிறு விரலில் மை பூசுவதற்கு இடமளிக்கவும். வாக்குச் சீட்டு வழங்கப்படும் போது, அதில் துவாரம் இடப்படுகின்றதா என்பதைக் கவனிக்கவும். அவ்வாறு துவாரம் இடப்படாவிட்டால் அதைத் துவாரமிட்டுத் தருமாறு கேட்கவும்.
- ★ வாக்கெடுப்புச் சாவடிக்குள் சென்று தாம் விரும்பும் வேட்பாளருக்கு வாக்களித்து, வாக்குச் சீட்டை மடித்து வாக்குச் சீட்டுப் பெட்டியுள் போட்டு விட்டு துரிதமாக வாக்கெடுப்பு நிலையத்தை விட்டு வெளியேறுங்கள்.
- ★ வாக்குச் சீட்டை வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்வது அல்லது வேறு பொருளை வாக்குச் சீட்டுப் பெட்டியுள் போடுவது சிறைத் தண்டனை விதிக்கப்படுவதற்கான குற்றச் செயல் களாகும்.
- ★ வாக்களிப்பதைத் தவிர வேறு விடயங்களுக்காக வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசித்தல் சட்ட விரோதமாகும்.

# வாக்குச் சீட்டில் புள்ளடி இடுதல்

★ வாக்காளர் தமது வாக்குச் சீட்டில், தாம் வாக்களிக்க விரும்பும் வேட்பாளரின் பெயருக்கும் சின்னத்திற்கும் முன்பாக அமைந்திருக்கும் வெற்றிடத்தில் "1" என்னும் இலக்கத்தை அடையாளமிட வேண்டும்.

★ ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடும் சந்தர்ப்பங்களில் வாக்காளர் விரும்பினால், இரண்டு (2), மூன்று (3) என்ற வகையில் விருப்பு வாக்குகளைக் குறிப்பிட முடியும்.

★ இரண்டாம் மூன்றாம் விருப்பு வாக்குகளைப் பிரயோகிக்கும் பட்சத்தில் தாம் அடுத்தபடியாக விருப்பத்தைத் தெரிவிக்கும் சின்னத்திற்கு முன்னே ''2'' அல்லது ''3'' என்ற வகையில் வெற்றிடத்தில் இலக்கங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | அபேட்சகர்களின் பெயர்கள் | சின்னம் | |
|---|---|---|---|
| 1 | அ |  | 1 |
| 2 | ஆ |  | |
| 3 | இ |  | |
| 4 | ஈ |  | 2 |
| 5 | உ |  | |
| 6 | ஊ |  | 3 |

(மாதிரி வாக்குச் சீட்டு)

## வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பதிலாக பிறிதோர் இடத்தில் வாக்களித்தல்

- ★ தமது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்தில் நிலவும் சீரற்ற நிலைமைகள் காரணமாக அவ்விடத்தில் வாக்களிக்க முடியாது என நியாயமான பீதி ஒரு வாக்காளருக்கு ஏற்படுமானால் வேறு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி தேர்தல் ஆணையாளருக்கு ஒரு விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பிக்க முடியும்.
- ★ நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு வாரத்திற்குள் இக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். கோரிக்கை கிடைக்கப் பெற்று ஒரு வாரத்திற்குள் மேற்படி விண்ணப்பம் ஏற்றுக் கொண்டமையை அல்லது நிராகரித்தமையை தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்ட வாக்காளருக்கு அறிவித்தல் வேண்டும்.
- ★ வாக்கெடுப்பு நிலையத்தை தீர்மானிக்கும் தற்றுணிபு தேர்தல் ஆணையாளருக்கு உரித்தானது.
- ★ மேற்படி வாக்களிப்பின் போது வாக்காளர் அளித்த வாக்கு குறிப்பிட்ட வாக்காளர் தம்மைப் பதிவு செய்துள்ள தேர்தல் மாவட்டத்தின் வாக்குகளுடன் எண்ணப்பட வேண்டும்.

*(119 - (ஆ) வாசகம்)*

## வாக்களிப்பதற்கு விடுமுறை பெறுதல்

★ வாக்களிக்கும் உரிமை உள்ள ஒரு நபர், தொழில் செய்பவராயின் வாக்களிப்பதற்கு போதிய விடுமுறையைப் பெற்றுத் தருமாறு தொழில் தருநரிடம் எழுத்து மூலம் கோர வேண்டும்.

★ மேற்படி கோரிக்கை கிடைக்கும் பட்சத்தில் விடுமுறை பெற்றுத் தருவதாக குறிப்பிட்ட வாக்காளருக்கு அறிவித்தல் வேண்டும். விடுமுறை கோரும் வாக்காளர்களின் பெயர்களையும் விடுமுறை வழங்கப்பட்ட வாக்காளர்களின் பெயர்களையும், விடுமுறை வழங்க ப்பட்ட கால எல்லையையும் மேற்படி வேலைத்தலத்தில் எல்லோ ரும் காணக்கூடிய பகிரங்கமான இடத்தில் காட்சிக்கு வைத்தல் தொழில் தருநரின் பொறுப்பாகும்.

★ மேற்படி விடுமுறைக் கால எல்லை 4 மணித்தியாலங்களுக்குக் குறையக்கூடாது. குறிப்பிட்ட வாக்காளரின் வாக்கெடுப்புப் பிரதே சத்திற்கு அமைய விடுமுறைக் கால எல்லை 1 நாளாகவோ அல்லது 2 நாட்களாகவோ அமைய முடியும். இவ்வாறு வழங்கப்படும் விடு முறை சம்பளத்துடனான விடுமுறையாக அமைதல் வேண்டும். சாதாரண விடுமுறை நாட்களில் இருந்து இது குறைக்கப்படக்கூடாது.

★ இவ்வாறு தொழில் தருநர் விடுமுறை வழங்க மறுப்பாராயின் இவ்வாசகத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒரு மாதச் சிறைத் தண்ட ணையுடன் 500/= ரூபாய்க்கு மேற்படாத தண்டப் பணத்தை அவரிடம் அறவிட முடியும்.

*(வாசகம் 110)*

# வாக்கெடுப்பு நிலையத்திற்கான முகவர் செயற்பட வேண்டிய முறை

வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் பின்வருமாறு நியமனஞ் செய்யப் படுவார்கள்.

1. ஒரு ஜனாதிபதி வேட்பாளர் ஒரு முகவரை நியமிக்க முடியும்.

2. இவ்வாறு நியமனஞ் செய்யப்பட்ட ஒரு முகவர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் (பிரிவிற்கும்) ஒவ்வொரு தகுதி வாய்ந்த முகவரை நியமிக்க முடியும்.

3. மேற்படி தகுதி வாய்ந்த முகவர் மேற்படி தேர்தல் மாவட்டத்திற்குள் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் (பிரதேசம்) ஒவ்வொரு முகவரை நியமனஞ் செய்ய முடியும்.

4. இத்தகைய தேர்தல் தொகுதி (பிரதேச) முகவர் மேற்படி தேர்தல் தொகுதியில் (பிரதேசம்) அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையங் களுக்கு அமைய நியாயமான அளவு முகவர்களை நியமிக்க முடியும். ஆனால், குறிப்பிட்ட ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் ஒரே சமயத்தில் ஒரு வேட்பாளரின் சார்பில் இரண்டு முகவர்கள் மாத்திரமே செயற்பட அனுமதிக்கப்படுவார்கள்.

★★ இவ்வாறாக முகவர்கள் நியமனஞ் செய்யப்படும் சகல சந்தர்ப்ப ங்களிலும், அவ்வாறு நியமனம் செய்யப்படுபவரின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது ஒரு அரசாங்க திணைக் களம், அல்லது ஒரு கூட்டுத்தாபனம் வழங்கிய அடையாள அட்டை இலக்கத்துடன் உரிய நியமனக் கடிதத்தை குறிப்பிட்ட முகவர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

***(32 (1-3) வாசகங்கள்)***

★★ மேற் குறிப்பிட்டவாறு பிரதேச முகவர் வாக்கெடுப்பு நிலைய முகவரின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம், அரசாங்க திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனம் வழங்கிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தனக்கு அதிகாரம் அளிக்கும் கடிதத்தை கைச்சாத்திட்டு வாக்கெடுப்பு நிலைய தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் கையளிக்க வேண்டும்.

***(32 (3) வாசகம்)***

★★ வாக்கெடுப்பு நிலைய முகவர் வாக்கெடுப்பு நிலையத்தில் வேட்பாளரின் கடமைகளை செயற்படுத்தும் நபர் ஆவார். ஆகவே, வாக்கெடுப்பு நிலைய முகவர் வாக்கெடுப்பு நிலையத்தில் வேட்பாளருக்குரிய அதிகாரங்களைச் செயற்படுத்துவார்.

★★ வாக்கெடுப்பு நிலைய முகவர் காலை 6 மணிக்கேனும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தர வேண்டும்.

★★ வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தரும்போது அடையாள அட்டை அல்லது அரசாங்க திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனம் வழங்கிய அடையாள அட்டை, நியமனக் கடிதம், தமக்குரிய இலாஞ்சனை என்பவற்றை எடுத்து வர வேண்டும்.

★★ வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்ற உடன் ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சட்டத்தின் 75(1) வாசகத்திற்கு அமைய உறுதிப் பிரகடனத்தைச் செய்ய வேண்டும். இதற்கமைய வாக்கெடுப்புப் பற்றிய இரகசியத் தன்மையை பாதுகாப்பதற்குக் கடப்பாடு உடையவராவார்.

★★ வாக்காளர் ஒருவரின் பெயர், இலக்கம், அல்லது உத்தியோகபூர்வச் சின்னம் பற்றிய எதுவிதத் தகவலையும் எவருக்கும் வழங்கக் கூடாது.

***(75 - (2) வாசகம்)***

★★ வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டு கிடைத்த பின்னர் அவர் அதில் புள்ளடியிட்டு வாக்குப் பெட்டியில் போடும் வரை அவருடன் பேசக்கூடாது.

***(75(5) வாசகம்)***

★★ அதிகாரமளிக்கப்பட்ட கடிதம் அல்லது தேசிய அடையாள அட்டை அல்லது அரசாங்கத் திணைக்கள அல்லது அரச கூட்டுத்தாபன அடையாள அட்டை இல்லாத முகவர் ஒருவர் இருப்பின் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து மேற்படி முகவரை வெளியேற்றுமாறு தலைமை தாங்கும் உத்தியோகத்தரைக் கோர முடியும்.

***(32 (3. இ) வாசகம்)***

★★ உரிய முறையில் அறிவிக்கப்படாத தேர்தல் முகவர் வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசிப்பதை தலைமை தாங்கும் உத்தியோகத்தர் மூலம் தடுக்க முடியும்.

***(32(3) (இ) வாசகம்)***

★★ வாக்குச்சீட்டுப் பெட்டிகளை பரிசீலனை செய்யுங்கள். அது வெறுமையாகவும், பெட்டியிலிருந்து வாக்குச் சீட்டுக்களை எடுக்க முடியாத வகையிலும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளதா எனப்பாருங்கள்.

ஏதாவது குறைபாடு காணப்பட்டால், வாக்கெடுப்பு நிலைய தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கு அறிவித்து அவருடைய ஜர்னல் புத்த கத்தில் எழுதுவிக்கவும்.

*(34 (1-ஆ) வாசகம்)*

★★ வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கு முன்பாக வாக்கெடுப்பு நிலைய தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்குச் சொந்தமான வாக்குச் சீட்டுப் புத்தகங்கள், வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை, முதன் முதலில் விநியோகித்த வாக்குச் சீட்டுப் புத்தகத்தின் இலக்கம், உத்தியோக பூர்வ இலச்சினை, உத்தியோகபூர்வச் சின்னம், வாக்காளர் இடாப்புப் பகுதிகளின் பிரதிகள் என்பன உரிய முறையில் இருக்கின்றனவா எனப் பரிசீலனை செய்யுங்கள். இவை பற்றிய தகவல்களைக் குறிப்பெடு த்துக் கொள்ளுங்கள்.

*(34 (1-ஆ) வாசகம்)*

★★ வாக்காளர் இடாப்பில் தபால் வாக்குகளுக்கு உரிய இலக்கங்களை தனித்தனியாகக் குறித்துக் கொள்ளுங்கள். இதற்குத் தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் தபால் வாக்குகளைப் பற்றிய விபரங்க ளைக் கேட்டறிந்து தனியான குறியீடு ஒன்றை இட்டுக் கொள்ளுங்கள்.

*(26 (1) - (இ) வாசகம்)*

★★ அதேபோல இறந்த, வெளிநாடு சென்ற, நோய்வாய்ப்பட்டுள்ள, கைது செய்யப்பட்ட அல்லது வேறு காரணங்களால் வாக்கு அளிப்ப தற்கு வருகை தரமுடியாத நபர்களைப் பற்றிய தகவல்களை வாக்கா ளர் இடாப்பில் விசேட குறியீடு இட்டு குறித்துக் கொள்ளுங்கள்.

★★ தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் விசாரித்து வாக்கெடுப்பு நிலையத்தில் தேர்தல் கடமையிலீடுபட்டிருக்கும் உத்தியோகத் தர்களை அடையாளங் கண்டு குறித்துக் கொள்ளுங்கள்.

★★ இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு முறையேனும் அதுவரை விநி யோகிக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களைப் பற்றி விசாரித்து குறித்துக் கொள்ளுங்கள்.

★★ வாக்குச்சீட்டு வழங்கப்படுவதற்கு முன்னர் வாக்காளரின் இடது கை சிறுவிரல் நகத்திற்கு மேலாக துடைத்து அழிக்க முடியாத மை உரிய முறையில் பூசப்படுகின்றதா என அவதானியுங்கள். அவ்வாறு பூசப்ப டாவிட்டால், தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கு அது பற்றி அறிவிக்கவும். அவர் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்காது விட்டால் அதனைக் குறித்துக் கொள்ளுங்கள்.

★★ குறிப்பிட்ட ஒரு வாக்காளர் சிறு விரலில் மை பூச மறுத்தால், அல்லது ஏற்கனவே மை பூசப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டால் மேற்படி

நபருக்கு வாக்குச் சீட்டு வழங்கப்படுவதை எதிர்க்க வேண்டும்.

*(36 (1) வாசகம்)*

★★ இடது கை சிறுவிரலில் மை பூசப்பட வேண்டும். இடது கை சிறுவிரல் இல்லையாயின் இடது கையின் வேறு ஒரு விரலிலும், இடது கையில் விரல்கள் காணப்படாது விட்டால், வலது கையின் சிறு விரலிலும், விரல்கள் ஒன்றுமே காணப்படாதுவிட்டால், இடது கையின் அல்லது வலது கையின் ஏதாவது ஒரு பகுதியிலும் மை பூசப்பட வேண்டும்.

*(36 (3) (ஆ) வாசகம்)*

★★ சகல வாக்குச்சீட்டுக்களும் விநியோகிக்கப்படும் பொழுது உத்தியோக பூர்வ இலச்சினை உள்ளதா எனப் பரிசீலனை செய்து பாருங்கள். இலச்சினை இல்லாவிட்டால் உடனடியாக தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கு அறிவிக்கவும்.

*(35(2) (இ) வாசகம்)*

★★ வாக்காளர் ஒருவர் வாக்கு அளிப்பது பற்றித் தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் ஆலோசனை கேட்டால், தலைமை தாங்கும் உத்தியோகத்தரோ அல்லது அவரது அதிகாரம் பெற்ற வேறு பதவியினரோ அங்கு கூடியுள்ள எல்லோருக்கும் கேட்கத் தக்கதாக ஆலோசனை கூறப்பட வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் விழிப்பாக இருங்கள்.

*(38(1) வாசகம்)*

★★ வாக்கு அளிக்கும் போது புள்ளடி இடும் இடத்திற்கு அருகில் வாக்காளர் அனாவசியமாக தாமதிப்பார்களாயின் அல்லது அது போன்ற சம்பவம் இடம் பெறுமாயின் அது பற்றித் தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கு முறையிட்டு அந்த நிலைமையைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோர வேண்டும்.

*(37(2) வாசகம்)*

★★ வாக்காளர்கள் தமது வாக்குச் சீட்டுக்கு மேலதிகமாக வேறு ஏதாவது பத்திரத்தைக் கொண்டு செல்கின்றனரா? வாக்குப் பெட்டியில் போடுகின்றனரா? என்பது பற்றிக் கவனமாக அவதானிக்க வேண்டும்.

★★ வாக்களிப்பதெற்கென வருகை தரும் ஒரு வாக்காளர் தமது பெயரைச் சொல்லும் போது ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக மறுப்புத் தெரிவிக்கவும். வாக்குச்சீட்டு வழங்கப்படுவதற்கு முன்னர் இம் மறுப்பு தெரிவிக்கப்பட வேண்டும்.

★★ வாக்காளர் ஒருவரின் அடையாளம் பற்றிய சந்தேகம் ஏற்பட்டால் அவருடைய அடையாள அட்டையை பரிசீலனை செய்யுமாறு தலைமை தாங்கும் உத்தியோகத்தரைக் கோரலாம். அவ்வாறு இல்லாவிடின்

ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சட்டத்தின்படி ஈ, உ, ஊ, எ, என்னும் படிவங்களைப் பூர்த்தி செய்விக்குமாறு தலைமை தாங்கும் உத்தியோகத்தரைக் கோருங்கள். இப் படிவங்களைப் பூர்த்தி செய்ய மறுத்தால் வாக்குச் சீட்டை வழங்குவதைத் தலைமை தாங்கும் உத்தியோகத்தர் மறுக்கலாம்.

*(41 வாசகம்)*

★★ மேற்படி படிவங்களில் தவறான தகவல்களை வெளியிட்டால் 500/= ரூபாய்க்குக் கூடாத தண்டப் பணத்திற்கு அல்லது 6 மாதகால சிறைத் தண்டனைக்கு ஆளாகலாம்.

*(41(3) வாசகம்)*

★★ வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதற்கு வாக்குச் சூட்டு ஒன்றைக் கேட்கும் போது அவருடைய பெயரில் ஏற்கனவே வாக்குச் சீட்டு வழங்கப்பட்டிருந்தால் வேறுபட்ட நிறத்தைக் கொண்ட மற்றுமொரு வாக்குச் சீட்டு வழங்கப்பட வேண்டும். இது சாதாரணமாக வாக்கு எண்ணப்படும் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. இவை இரட்டை வாக்குப் பத்திரங்களாகவே கருதப்படும்.

*(43 வாசகம்)*

★★ ஒரு வாக்காளர் தன்னுடைய வாக்குச் சீட்டை தற்செயலாக பழுது படுத்தினால், அது பழுதுபட்ட வாக்குச் சீட்டாக உறுதிப்படுத்திய பின்னர், தலைமை தாங்கும் உத்தியோகத்தர் பழுதுபட்ட வாக்குச் சீட்டுக்குப் பதலாக வேறு புதிய வாக்குச் சீட்டு ஒன்றை வழங்குவார். அதேசமயம் தலைமை தாங்கும் உத்தியோகத்தர் பழுதுபட்ட வாக்குச் சீட்டை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்.

*(42 வாசகம்)*

★★ மாலை 4 மணி வரை வாக்குச் சீட்டு ஒப்படைடைக்கப்பட்ட வாக்காளர் தவிர்ந்த ஏனைய வாக்காளர்கள் மாலை 4 மணிக்குப் பின்னர் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவ்வாறு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டால் அது உத்தியோகபூர்வமாக குறித்துக் கொள்ளப் பட வேண்டும். அவ்வாறு குறித்துக் கொள்ள மறுக்கப்பட்டால் பொலிசுக்கு முறையீடு செய்தல் வேண்டும்.

*(44 வாசகம்)*

★★ வாக்கெடுப்பு முடிவடைந்தவுடன் வாக்குப் பெட்டியில் மீண்டும் வாக்குச்சீட்டுக்கள் போட முடியாதவாறு இலச்சினை இடப்பட வேண்டும்.

*(45 (1-அ) வாசகம்)*

அ. ஒவ்வொரு வாக்குச் சீட்டுப் பெட்டியினதும் சாவிகள், பாவிக்கப்படாத - பழுதுபட்ட வாக்குச் சீட்டுக்கள், குறியீடு செய்யப்பட்ட வாக்காளர் இடாப்புகள், வாக்குச்சீட்டுகளின் அடியிதழ்கள் ஒப்படைக்கப்படாத வாக்காளர் இடாப்புகள், கேட்டுப் பெறும் வாக்குகளின் நிரல்.

*(45 (1-அ-உ) வாசகங்கள்)*

ஆ. தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் பொறுப்பிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை எடுத்துக் காட்டி அத்துடன் வாக்காளருக்கு வழங்கப்பட்ட, பழுதடைந்தவை தவிர்ந்த வாக்குச் சீட்டுக்கள், பழுதடைந்த வாக்குச்சீட்டுக்கள், பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுக்கள் என்ற தலைப்புக்களின் கீழ் தனித்தனியாகப் பொதிகளில் இட்டு இலட்சினை பொறித்தல் வேண்டும். வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் இதனை அவதானிக்க வேண்டும்.

*(45 (2- அ-இ) வாசகங்கள்)*

★★ **தான் வாக்கெடுப்பு நிலையத்தில் குறித்துக் கொண்ட குறிப்புக்களையும், புள்ளி விபரங்களையும் வாக்குச் சீட்டுப் பெட்டிகளை எடுத்துச் செல்லும் வாகனத்தின் இலக்கத்தையும் குறிப்பிட்டு உடனடியாகவே வாக்கு எண்ணும் நிலையத்தில் கடமை புரியும் தமது முகவரிடம் ஒப்படைப்பது மிகவும் முக்கியமானது.**

★★ பின்வருவோர் மாத்திரமே வாக்கெடுப்பு நிலையத்திற்கு உட்செல்ல அனுமதிக்கப்பட்டோர் ஆவர்.

1. தேர்தல் வேட்பாளர்கள்
2. தேர்தல் முகவர்கள்
3. அதிகாரம் பெற்ற முகவர்கள்
4. பிரதேச முகவர்கள்
5. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்
6. தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோாகத்தர்கள்
7. தேர்தல் கடமையிலீடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள்

இவர்களைத் தவிர்ந்த வேறு ஆட்கள் உட்பிரவேசித்தால் அவர்களை வெளியே அகற்றுமாறு வாக்கெடுப்பு நிலையத் தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் கோரலாம். அத்தகைய பிற ஆட்களை வெளியேற்றும் பொறுப்பு தலைமை தாங்கும் உததியோகத்தரைச் சார்ந்தது.

*(33 (2) வாசகம்)*

★★ எந்த ஒரு நபரும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஒழுங்கீனமாக செயற்படவோ அல்லது நடந்து கொள்ளவோ முடியாது. அத்தகைய நபர்களை வெளியேற்றும் அதிகாரம் தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கு உண்டு.

*(33 (3) வாசகம்)*

★★ முகவர் ஒருவர் தேநீர் அருந்துவதற்கோ அல்லது உணவு உட்கொள்வதற்கோ வெளியே செல்வதாயின் அதிகாரம் பெற்ற முகவரை தனக்குப் பதிலாக வாக்கெடுப்பு நிலையத்தில் நிறுத்தி விட்டுச் செல்ல வேண்டும். கூடியவரை தேநீர் அருந்துவதற்கோ மதிய உணவிற்கோ வெளியே செல்வதைத் தவிர்த்து வேறு மாற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★★ வாக்கெடுப்பு நிலைய முகவரை அச்சுறுத்தல் அல்லது மிரட்டல் பாரதூரமான குற்றமாகும். யாராவது அவ்வாறு நடந்து கொண்டால் உடனடியாக தலைமை தாங்கும் உததியோகத்தருக்கு முறையீடு செய்ய வேண்டும். அதற்கு மேலதிகமாக பொலிசாருக்கும் முறையீடு செய்ய வேண்டும்.

★★ பொலிசார் குறிப்பிட்ட முறையீட்டை ஏற்க மறுத்தால் மேற்படி பொலிஸ் நிலைய அதிபருக்கும் அவருடைய உயர் உததியோகத்தருக்கும் முறையீடு செய்யவும். மேற்படி முறையீட்டில் பெயர், ஊர், வயது, ஆண்/பெண் விபரங்கள், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு நடந்த சம்பவத்தையும் எழுதி பதிவுத் தபால் மூலம் அறிவிக்க வேண்டும். தபால் நிலையப் பற்றுச் சீட்டை குறிப்பிட்ட முகவர் தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும்.

★★ ஒரு முகவர் பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமுன்னர் அதிகாரம் பெற்ற மற்றுமொரு முகவரை வாக்கெடுப்பு நிலையத்தில் அமர்த்திச் செல்ல வேண்டும்.

★★ வாக்கெடுப்பு நிலையத்தில் இடம்பெறும் ஏதாவது ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதச் செயல் தொடர்பாக முறையீடு செய்யும் அவசியம் ஏற்பட்டால், தலைமை தாங்கும் உத்தியோகத்தரிடம் உள்ள ஜர்னல் புத்தகத்தில் அதனைக் குறிப்பிடவும். மேற்குறிப்பிட்ட முறையீடுகளை எழுதுவதற்கு ஜர்னல் புத்தகத்தை வழங்க வேண்டியது தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் கடமையாகும்.

★★ தேர்தல் நடக்கும் தினத்தில் வாக்கெடுப்பு நிலையத்தைக் கண்காணிப்பதற்கு நடமாடும் பொலிஸ் உத்தியோகத்தரும், தெரிவத்தாட்சி உத்தியோகத்தரின் பிரதிநிதியும் வருகை தருவார்கள். ஏதாவது முறையீடு அல்லது விசேட சம்பவம் இருப்பின் அது பற்றி அவர்களுக்கு முறையீடு செய்யலாம்.

# தேர்தல் குற்றங்கள்

தேர்தல் சட்டங்களுக்கு மேலதிகமாக குற்றவியல் சட்டக் கோவையிலும் தேர்தல் சட்டங்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

1. தேர்தல் சட்டங்களின் கீழ் செய்யப்படும் குற்றங்கள் தொடர்பாக வழக்குத் தொடருவதாயின் சட்டமா அதிபரின் அனுமதி அவசியமாகின்றது. ஆனால் குற்றவியல் சட்டக் கோவையில் குறிப்பிடப்படும் குற்றங்கள் தொடர்பாக தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடரலாம்.

2. மேற்படி சட்டத்தின்படி

   (அ) வாக்களிக்கத் தூண்டும் பொருட்டு வெகுமதிகளை வழங்குதல்,

   (ஆ) அத்தகைய அதிகாரத்தைப் பிரயோகித்தல் அல்லது

   (இ) எத்தகைய அதிகாரத்தைப் பாவிப்பதற்குத் தூண்டும் வகையில் வெகுமதியாக தனது சார்பில் அல்லது வேறு ஒருவர் சார்பில் நினைவுப் பொருள் ஒன்றை ஏற்றுக் கொள்ளுதல்

   **(குற்றவியல் சட்டக் கோவை 169)**

   (ஈ) ஒரு வேட்பாளர் மீது அல்லது வாக்காளர் மீது அக்கறை செலுத்தும் ஒரு நபருக்கு ஏதாவது நட்டத்தை ஏற்படுத்துவதாக மிரட்டல்,

   (உ) ஒரு வாக்காளர் மீது அல்லது வேட்பாளர் மீது அக்கறை காட்டும் ஒரு நபர் தெய்வத்தின் கோபத்திற்கோ அல்லது மதரீதியான குற்றச்சாட்டிற்கோ ஆளாகலாம், எனத் தூண்டுதல் வாக்களிப்பதற்கான தடையாகவே கருதப்படும். (பொது மக்கள் கொள்கைப் பிரகடனம் அல்லது மக்கள் செயற்பாடு பற்றிய உறுதி மொழி இதற்கு ஏற்புடையது அல்ல)

   (ஊ) ஒரு தேர்தலின் போது உயிர் வாழும் அல்லது இறந்த ஒரு நபரின் பெயரால் வாக்குச் சீட்டு ஒன்றைக் கேட்டல் அல்லது அவ்வாறு வாக்களித்தல், அல்லது அத்தகைய ஒரு செயலுக்கு உதவ முயலுதல் குற்றமாகும்.

இத்தகைய குற்றங்கள் தொடர்பாக மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிக்க அல்லது தண்டப் பணம் அறவிட முடியும். (குற்றவியல் சட்டக் கோவையின் 169 அ முதல் ஏ வரையிலான வாசகங்கள் ஏற்புடையவை)

# தேர்தல் சட்டத்திற்கு அமையத் தவறுகள்

1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான சட்டத்திற்கு அமைய தேர்தல் தவறுகள், ஊழல்கள், பின்வருமாறு: இத் தவறுகளைத் தவிர்ப்பதற்கும், மற்றையோர் இத் தவறுகளைப் புரிகின்றனரா என விழிப்பாக இருக்கவும், இம் முறை ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஆர்வம் செலுத்தும் அனைவரும் இத் தவறுகளை அறிந்திருப்பது பிரயோசனமாகும். மேற்படி சட்டத்தின் V ஆம் பாகத்தின் 66வது வாசகம் அ முதல் ஞ வரையில் இத் தவறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் சாராம்சம் பின்வருமாறு:

**66வது வாசகத்தின் 'அ' முதல் 'ஞ' வரை குறிப்பிடப்பட்டுள்ள தவறுகள்**

- ★ ஏதேனும் வாக்குச்சீட்டின் உத்தியோகபூர்வ சின்னத்தை போலியாகத் தயாரித்தல், மோசடியாக உருவழித்தல், அழித்து விடுதல்;
- ★ முறையான அதிகாரமின்றி வாக்குச் சீட்டை வழங்குதல், விற்பனை செய்தல், விலைக்கு வாங்குதல், உத்தியோகபூர்வ குறியீட்டைக் கொண்ட வாக்குச்சீட்டு ஒன்றை தன்னிடம் உடைமையாக வைத்திருத்தல், வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்லுதல்.
- ★ புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டை வாக்கெடுப்பு நிலையத்தில் காட்சிக்கு வைத்தல், வாக்குச் சீட்டு தவிர்ந்த வேறு எதனையும் வாக்குச்சீட்டுப் பெட்டியுள் போடுதல்,
- ★ முறையான அதிகாரம் இன்றி வாக்குச்சீட்டுக்களை அச்சிடுதல்
- ★ வாக்குச்சீட்டுப் பெட்டி ஒன்றினுள் வாக்குச்சீட்டு ஒன்று இடப்பட்ட பின்னர் அதை வெளியே எடுத்தல், வாக்குச்சீட்டின் உருவழிப்பதற்கு ஏதேனும் உபகரணத்தை அல்லது கருவியை பயன்படுத்துதல், தேர்தல் நோக்கத்திற்காக குடியரசு இறக்குமதி செய்யும் உபகரணங்களை பாவித்தல் அல்லது இறக்குமதி செய்தல்.
- ★ அஞ்சல் வாக்காளரின் ஆள் அடையாளம் பற்றி பொய்ப் பிரகடனம் செய்தல், அஞ்சல் வாக்குச் சீட்டுகள் அடங்கிய மேலுறையை முறையான அதிகாரம் இன்றி திறத்தல், அழித்தல், அல்து உருவழித்தல்.
- ★ உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அறிவித்தல் அட்டையை முறையான அதிகாரமின்றி அச்சிடுதல் தேர்தல் சின்னத்தை அல்லது தவறான குறியீடு ஒன்றை இடுதல்.
- ★ வாக்களிக்கத் தகுதி அற்றவர் என்று அறிந்தும் வாக்களித்தல்.
- ★ இடது கை சிறு விரலில் மை பூசப்படும் போது முறையான அதிகாரமின்றி உரிய மையைத் தவிர்த்து வேறு வகை மையைப் பூசுதல்.
- ★ ஏற்கனவே இடது கைசிறுவிரலில் பூசப்பட்ட மையை மோசடியாக உருவழித்தல்.

★★ மேற்குறிப்பிட்ட தவறுகளுக்கு மேல்நீதிமன்றம் இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்க முடியும். ஏழு ஆண்டுகள் குடியியல் உரிமையை இரத்துச் செய்யவும் முடியும்.

## வாக்கெடுப்பு நிகழ்த்தப்படும் நாளில் தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள்

**வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது வர்க்கெடுப்பு நிலைய வாசலில் இருந்து அரைக்கிலோமீற்றர் தூர எல்லைக்குள் பின்வரும் நடவடிக்கைகளை மேற் கொள்வது தவறு**

★ வாக்களிக்குமாறு இரந்து கேட்டல், வாக்காளரடம் வாக்கைப் பரிந்து கேட்டல், பகிரங்கமாகச் சத்தமிட்டு பேசுதல், ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டாம் எனத் தூண்டுதல். தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என வசப்படுத்துதல்.

★ வாக்கெடுப்புப் பற்றிய துண்டுப் பிரசுரம், சுவரொட்டி, அறிவித்தல், சித்திரம், வேட்பாளர் ஒருவரின் புடைப்படம், தேர்தல் சின்னம் என்பவற்றை விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல். (உத்தியோக முறையான துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, என்பன இதில் உள்ளடக்கப்பட மாட்டாது).மேற்கூறிய தவறுகளுக்குதண்டப்பணம் 100/= ரூபாயாகும். சிறைத் தண்டனை ஆறு மாதகாலமாகும்.

★ வாக்களிப்பதற்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருவோருக்கும், தேர்தல் கடமைகளில் ஈடுபடுவோருக்கும் தொந்தரவு ஏற்படுத்தக்கூடிய வகையில் வாக்கெடுப்பு நிலையத்தின் அருகில் அல்லது அதன் உள்ளே சத்தமிடல், ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துதல், ஒழுங்கீனமாகச் செயற்படுதல் ஆகிய தவறுகளுக்குத் தண்டப்பணம் 100/= ரூபாயாகும். சிறைத் தண்டனை ஆறுமாத காலமாகும்.

★ மேற்படி நடைமுறைகளை மீறுவதைத் தடுப்பதற்கு பொலிஸ் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தகைய மீறுகைக்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் உபகரத்தையும் கைப்பற்றலாம்.

**(68 வாசகம்)**

## ஊர்வலங்கள்

நியமனப் பத்திரம் தாக்கல் செய்து முதல் நாள் தொடங்கி வாக்கெடுப்பு முடிவு வெளியாகி ஒரு வாரம் வரை ஊர்வலங்களை நடத்துதல், ஒழுங்குபடுத்துதல், பங்குபற்றல் தடைசெய்யப்பட்டுள்ளது. (தேர்தலுக்கு உதவும் நடவடிக்கை அல்லாத வகையில் மேதின ஊர்வலம் அல்லது சமய அல்லது சமூக நோக்கங்களுக்காக மட்டும் ஊர்வலம் நடத்த முடியும்) மேற்படி தவறுகளுக்குத் தண்டப் பணம் 100/= ரூபாயாகும். சிறைத் தண்டனை ஆறுமாதகாலமாகும்.

*(69 வாசகம்)*

## பொதுக் கூட்டங்கள்

வாக்கெடுப்புத் தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னரும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டு ஒரு வாரம் வரையும் பொதுக் கூட்டம் எதுவும் நடத்தப் படக்கூடாது. மேற்படி தவறுகளுக்குத் தண்டப்பணம் 100/= ரூபாயாகும். சிறைத் தண்டனை ஆறுமாத காலமாகும்.

*(70 வாசகம்)*

மேற்படி தவறுகளைச் செய்ய எத்தனிப்போருக்கும் மேற்கூறிய தண்டனைகளே வழங்கப்படும். மேற்படி தவறுகளையிட்டு பிடியாணையின்றிக் கைது செய்யப்பட முடியும். ஆனால், 66, 67, 68, 69, 70 ஆகிய வாசகங்களின் செய்யப்படும் தவறுகளுக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரம் தேவை.

*(71 வாசகம்)*

## பிரசார அறிவித்தல்

வாக்கெடுப்பு பற்றிய பிரசார அறிவித்தல், சுவரொட்டி என்பவற்றை அதன் வெளியீட்டாளரது - அச்சிட்டவருடைய பெயர் , விலாசம் என்பவற்றைக் குறிப்பிடாமல் விநியோகித்தல், ஒட்டுதல் வேட்பாளர் அல்லாத ஒருவரால் செய்ய முடியாது. மேற்படி தவறுகளுக்குத் தண்டப்பணம் 500/= ரூபாயாகும். 85ஆம் வாசகத்தின்படி வேட்பாளரோ அல்லது அவருடைய பிரதிநிதியோ இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

*(72 வாசகம்)*

# தேர்தல் காரியாலயங்கள்

தேர்தல் நியமனக் காலப்பகுதியின் முதலாம் நாள் தொடங்கி வாக்கெடுப்பு தேதிக்கு முதல்நாள் வரை தேர்தல் நடவடிக்கைகளுக்காக பின்வருமாறு தேர்தல் காரியாலயங்களை வைத்திருக்கலாம்.

★ ஒரு வேட்பாளர் அல்லது அவரது முகவர் ஒரு குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்தில் ஒரு மத்திய தேர்தல் காரியாலயத்தையும் அத்துடன் ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவில் ஒரு கிளைத் தேர்தல் காரியாலயத்தையும் வைத்திருக்கலாம்.

★ ஒவ்வொரு தேர்தல் பிரதேசத்திலும் ஒவ்வொரு கிளைக் காரியாலயத்தை வைத்திருக்க முடியும்.

★ ஒரு வேட்பாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற முகவர் தமது வதிவிடத்தையும் ஓர் தேர்தல் காரியாலயமாக பயன்படுத்த முடியும்.

***(73 வாசகம்)***

★ மேற்படி தேர்தல் காரியாலயம் அமைக்கப்படுவது பற்றி பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் நிலையத் தலைவருக்கும் குறிப்பிட்ட தேர்தல் மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்கும் அறிவிக்கப்பட வேண்டும்.

***(73-(6) வாசகம்)***

★ மேற்படி வாசகம் தொடர்பான தவறுகளையிட்டு வழக்குத் தொடர்வதற்கு சட்ட மாஅதிபரின் அங்கீகாரம் தேவை

***(73-(5) வாசகம்)***

★ மேற்படி தவறுகளுக்கு மாஜிஸ்ரேட் நீதிமன்றம் 100/= ரூபாய் தண்டப் பணம் அல்லது ஒரு மாத கால சிறைத் தண்டனை விதிக்க முடியும். அல்லது இரண்டு தண்டனைகளையும் விதிக்க முடியும்.

***(73-(3) வாசகம்)***

## தேர்தல் சின்னங்களைக் காட்சிக்கு வைத்தல்

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட திகதி முதல் வாக்கெடுப்பு தேதிக்கு அடுத்த நாள் வரை பின்வருமாறு தேர்தல் சின்னங்களை காட்சிக்கு வைத்தல் சட்ட விரோதமானதாகும்.

1. வேட்பாளர் ஒருவர் போக்குவரத்திற்குப் பயன்படுத்தும் வாகனத்தைத் தவிர வேறு தனிப்பட்ட அல்லது பொது இடத்தில் தேர்தல் சின்னத்தைக் கொண்ட கொடியை அல்லது பதாகையை காட்சிக்கு வைத்தல்.

2. பொதுமக்கள் வருகை தருவதற்கு உரிமையுடைய ஓரிடத்தில் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளர் ஒருவரின் புகைப்படத்தை தேர்தல் சின்னத்தை அல்லது அடையாளத்தை காட்சிக்கு வைத்தல். (தேர்தல் கூட்டம் நடத்தப்பட உள்ள ஓர் இடத்தில் கூட்டம் நடக்கும் தேதியில் மேற்படி தேர்தல் சின்னத்தைக் காட்சிக்கு வைத்தல் சட்ட விரோதமாகாது)

3. பொதுவீதி மீது அல்லது அதற்குக் குறுக்கே ஏதேனும் துண்டுப் பிரசுரத்தை, ஒட்டு விளம்பரத்தை, சுவரொட்டியை, சித்திரத்தை, அறிவித்தலை, வேட்பாளர் ஒருவரின் புகைப்படத்தை, சின்னத்தை அல்லது அடையாளத்தைக் காட்சிக்கு வைத்தல்.

★ மேற்படி ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் பிடியாணை இன்றிக் கைது செய்யப்பட முடியும். மேற்படி அறிவித்தல் உபகரணங்களை பொலிஸ் அதிகாரி கைப்பற்றி அகற்றி விடலாம்.

★ மேற்படி தவறுகளுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் நபர் ஒருவருக்கு 100/= ரூபாய்க்குக் குறையாத தண்டப் பணமும் ஒரு மாதச் சிறைத் தண்டனையும் விதிக்க முடியும்.

**(74 வாசகம்)**

## வாக்களிக்கும்படி இரந்து கேட்டல்

குடியியல் உரிமை இழந்த எவரும் மற்றையோருக்காக வாக்களிக்கும்படி கேட்பதோ சொற்பொழிவு நிகழ்த்துவதோ, முகவராகச் செயற்படுவதோ தவறாகும். இத்தகைய குற்றங்களுக்கு தண்டப் பணம் 1000 ரூபாயாகும். சிறைத் தண்டனை ஒரு மாதகாலமாகும்.

**(67 வாசகம்)**

# தேர்தல்களில் இரகசியம் பேணுதல்

வாக்களிப்பு நிலையமொன்றில் அல்லது வாக்குகள் எண்ணப்படுகையில் சமுகமாயிருக்கும் உத்தியோகத்தர்கள், எழுதுவினைஞர்கள், வேட்பாளர்கள், முகவர்கள் முதலில் இரகசியம் பேணுவதற்கான பிரகடனத்தில் உறுதி செய்து கைச்சாத்திட வேண்டும்.

**(75 வாசகம்)**

***''எனக்கு வாசித்துக் காட்டப்பட்ட, 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 75ஆம் வாசகத்தினால் தடை செய்யப்பட்டுள்ள எதனையும் செய்ய மாட்டேன் என நான் பயபக்தியுடன் வாக்குறுதி செய்து வெளிப்படுத்துகிறேன்.''*** எனப் பிரகடனஞ் செய்து கையொப்பமிடல் வேண்டும்.

## 75 வாசகத்தின் படி தடை செய்யப்பட்ட நடவடிக்கைகள்

★ வாக்கெடுப்பு பற்றிய இரகசியத்தைப் பேண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வாக்குச் சீட்டு ஒன்றைக் கேட்டு விண்ணப்பித்துள்ள அல்லது விண்ணப்பிக்காத, வாக்களித்துள்ள அல்லது வாக்களிக்காத வாக்காளர் இடாப்பிலுள்ள வாக்காளரின் பெயர், இலக்கம், குறியீடு பற்றிய ஏதேனும் தகவலை வாக்கெடுப்பு முடியுமுன்னர் எவருக்கும் தெரிவிக்கக் கூடாது.

★ எவரேனும் வாக்காளர் யாருக்கு வாக்களித்துள்ளார் என்பது பற்றிய தகவலையோ, வாக்குச் சீட்டின் பின்பக்கத்தில் உள்ள இலக்கம் பற்றியோ பெற்றுக் கொண்ட தகவலை எச் சந்தர்ப்பத்திலும் எவருக்கும் தெரிவித்தல்.

★ வாக்களித்துள்ள -வாக்களிக்க உள்ள வேட்பாளரைப் பற்றிய தகவலை எச் சந்தர்ப்பத்திலும் எவருக்கும் தெரிவித்தல்.

★ வாக்காளர் ஒருவருக்கு வாக்குச் சீட்டு வழங்கப்பட்ட பின்னரும் அதைப் பெட்டியில் போடுவதற்கு முன்னரும் வாக்காளருடன் தொடர்பு கொள்ளுதல் அல்லது தொடர்பு கொள்ள எத்தனித்தல்.

மேற்படி தவறுகளுக்கு 500/= ரூபாய் தண்டப் பணம், 6 மாதகாலச் சிறைத் தண்டனை, குடியியல் உரிமைகளைப் பறிமுதல் செய்தல் ஆகிய தண்டனைகள் வழங்கப்படலாம்.

# ஊழல் பழக்கங்கள்

## (1) ஆள்மாறாட்டம்

ஆள்மாறாட்டம் செய்தல் தவறு. உயிரோடிருக்கும் அல்லது இறந்த ஒரு வாக்காளருக்காக நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமோ வாக்களித்தல், ஒரு தடவைக்கு மேல் தனது சொந்தப் பெயரில் வாக்களித்தல் என்பன ஆள்மாறாட்ட மாகும்.

★ இத்தகைய தவறுகளுக்குப் பிடியாணை இன்றி கைது செய்ய முடியும்.

## (2) உபசாரம் செய்தல்

வாக்கெடுப்புக்கு முன்னர் அல்லது பின்னர் வாக்களிப்பதற்கோ அல்லது வேறு ஒருவருக்கு வாக்களிக்காது விலகியிருக்க ஏதேனும் தின்பண்டத்தை, பானத்தை வழங்கல் அல்லது அவற்றை வழங்குவதற்கான செலவை ஏற்றுக் கொள்ளுதல் என்பன உபசாரம் செய்தல் என்னும் தவறுக்குப் போதுமானது.

*(77 வாசகம்)*

## (3) தகாத செல்வாக்கு

வாக்காளர் ஒருவர் வாக்கை அளிக்க அல்லது அளிக்காது விலகியிருக்க அல்லது அத்தகைய வாக்காளர் வாக்களித்தமை வாக்களிக்காமை காரணமாக தாமே அல்லது வேறொருவர் மூலமாக மேற்படி வாக்காளருக்கு ஏதேனும் பலாத்காரத்தை, வன்முறையை, மட்டுப்பாட்டைப் பயன்படுத்துகின்ற அல்லது பயன்படுத்தப்போவதாகப் பயமுறுத்துகின்ற அல்லது வேறு வகையில் பௌதீக ரீதியில் அல்லது மானசீக ரீதியில் நட்டத்தை இடையூறை விளைவித்தல் அல்லது கடத்திச் செல்லுதல், அல்லது ஏதேனும் சூழ்ச்சி மூலம் சுதந்திரமான வாக்களிப்பிற்குத் தடையேற்படுத்துதல், வாக்களிக்க வற்புறுத்துதல், தூண்டுதல் என்பன தகாத செல்வாக்குகளாகும்.

★ சமயக் கூட்டம் ஒன்றில் வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காது விலகி இருக்கும்படி வாக்காளரைத் தூண்டும் விதத்தில் துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், சுவரொட்டி, சித்திரம், அறிவித்தல், புகைப்படம் என்பவற்றை

விநியோகித்தல் அல்லது காட்சிக்கு வைத்தல் தகாத செல்வாக்காகும். அதே சமயம் ஒரு வேட்பாளருக்கு ஆதரவு திரட்டும் வகையில் வழிபாட்டு இடம் ஒன்றில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்துதல் தகாத செல்வாக்காகும்.

★ வாக்களிக்கும்படி அல்லது வாக்களிக்காது விலகியிருக்கும்படி ஒரு ஸ்தாபனத்தின் உறுப்பினரைத் தூண்டுதல், வற்புறுத்துதல், மேற்படி உறுப்பினரின் குடும்ப அங்கத்தினருக்கு உரித்தான ஏதேனும் ஆத்மீகத் தொண்டு -சேவை அல்லது நலஉதவி எதனையும் அளிக்க மறுத்தல், அல்லது மறுப்பதாய் பயமுறுத்தல்

★ தொழில் தருநர் ஒருவர் தனது ஊழியரை வற்புறுத்தல், தூண்டுதல், தொழிலை நிறுத்துவதாகப் பயமுறுத்தல், சேவை வசதிகளை இல்லாதொழித்தல் அல்லது இல்லா தொழிக்கப் போவதாகப் பயமுறுத்தல் என்பன தகாத செல்வாக்குகளாகும்.

*(78 வாசகம்)*

## இலஞ்சம் வழங்குதல்

இத் தவறு மிகப் பரந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது. வாக்களிக்கும்படி அல்லது விலகியிருக்கும்படி தூண்டுவதற்கு நேரடியாகவோ அல்லது வேறு வகையிலோ பணம் வழங்கல், கடன் வழங்குதல், அவ்வாறு வழங்க உடன்படுதல் இலஞ்சமாகும்.

★ ஏதேனும் உத்தியோகம், பதவி, தொழில் வழங்குதல் அல்லது வழங்குவதற்கு உடன்படுதல், வெகுமதி, உறுதிமொழி என்பன இலஞ்சமாகக் கருதப்படுவதோடு அவற்றைப் பெறுதல் அல்லது பெறுவதற்கு உடன்படுதல் வேட்பாளர் அந்தஸ்திலிருந்து இராஜினாமாச் செய்யுமாறு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தூண்டுவதற்கு மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இலஞ்சம் வழங்குவதாகவே கருதப்படும்.

★ ஏதேனும் உடன்படிக்கைப் பிரகாரம் கடன், வெகுமதி, கொடை வழங்கி வாக்களிக்கும் அல்லது வாக்களிப்பில் ஈடுபடுவோர் இலஞ்சம் வாங்கியோராகக் கருதப்படுவார்கள். இவ்வாறு இலஞ்சம் வழங்குவதற்காக அறிந்து பணம் கொடுப்பவர்களும் இலஞ்சம் வாங்கியோராகக் கருதப்படுவார்கள்.

***(79 வாசகம்)***

## ஊழல் நடவடிக்கைகளுக்கான தண்டனைகள்

ஆள்மாறாட்டம், ஆள்மாறாட்டத்திற்கு உதவுதல் அறிவுரை வழங்குதல், உபசாரம் செய்தல், தகாத செல்வாக்கு, இலஞ்சம் வழங்குதல் ஆகிய தவறுகள் ஊழல் நடவடிக்கைகளாகக் கருதப்படும்.

*(80 வாசகம்)*

★ தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் அல்லது தேர்தலின் போது வேட்பாளர் ஒருவரின் தனிப்பட்ட குணவியல்பு நடத்தை என்பது பற்றியும், அவர் தேர்தலில் இருந்து ஒதுங்குவதாக ஏதேனும் பொய்யான பிரசாரத்தை வெளியிடுதல், தேர்தல் ஊழல்களாகக் கருதப்படும். ஆள்மாறாட்டத்திற்கான சிறைத் தண்டனை 12 மாத காலத்திற்கான கடூழிய மறியல் தண்டனையாகும். ஏனைய தவறுகளுக்கு 6மாத கால மறியல் தண்டனை. ஐந்து ஆண்டுகளுக்கு குடியியல் உரிமை பறிக்கப்படும். இது விடயமாக சட்ட மாஅதிபரே வழக்குத் தொடரலாம்.

★ தோல்வியுற்ற ஒரு வேட்பாளர் அல்லது அவரது முகவர் மேற்படி ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால், அத்தகையோருக்கும் மேற்படி தண்டனைகள் வழங்கப்படும்.

*(81 வாசகம்)*

# சட்டவிரோதமான நடவடிக்கைகள்

இச் சட்டத்தின் கீழ் சில வகையான செலவுகள் சட்ட விரோதமானதாகும். வாக்கெடுப்புத் திகதியில், வாக்கெடுப்பு நிலையத்திற்கும் - வாக்கெடுப்பு நிலையத்திலிருந்தும் வாகனத்தில் வாக்காளர்களைக் கொண்டு செல்வதற்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ வாடகை செலுத்துதல், ஒரு அறிவித்தலை அச்சிட்டுக் கொடுத்தல், ஒரு துண்டுப் பிரசுரத்தை, அறிவித்தலை வெளிக்காட்டி வைப்பதற்காக ஒரு வீட்டிற்கோ அல்லது காணிக்கோ ஒரு கொடுபனவை வழங்குதல் சட்ட விரோதமாகும். மேற்காட்டியவாறு ஒரு கொடுப்பனவைச் செய்தாலும் அதைப் பெறுதலும் தவறாகும். வாக்கெடுப்பு நடக்கும் போது ஏதேனும் வாகனத்தை அல்லது கலத்தை சேவையில் ஈடுபடுத்துதல், இரவலாகப் பெறுதல் என்பனவும் சட்ட விரோதமாகும். (வாக்களிப்பதற்கு நடந்து செல்ல முடியாத ஒரு வாக்காளர் இருப்பின் வாக்கெடுப்பின் போது அவரைக் கொண்டு செல்வதற்கு மாவட்ட தெரிவத்தாடடி உத்தியோகத்தரிடம் முன்கூட்டியே அங்கீகாரம் பெற வேண்டும்)

- ★ ஏதேனும் சட்டபூர்வமான தொழில் நோக்கத்திற்காக, துண்டுப் பிரசுரங்கள், பிரசார அறிவித்தல்கள் என்பவற்றிற்காக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வது சட்டவிரோதமாகாது.
- ★ இத்தகைய வாகனத்தை, கலத்தை அல்லது விலங்கை சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதாகக் கிடைத்த முறையீடு காரணமாகவோ அல்லது தாமாகவோ அல்லது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஆய்வு செய்து கண்டு பிடித்த பின்னரோ அத்தகைய வாகனத்தை அல்லது கலத்தை அல்லது விலங்கை பொலிஸ் நிலயைத்திற்கு எடுத்துச் சென்று வாக்கெடுப்பு முடியும் வரை தடுத்து வைத்துக் கொள்ள முடியும்.
- ★ இத்தகைய குற்றத்திற்காக மேல் நீதிமன்றம் ஒரு நபரை குற்றவாளியாகக் கண்டால் மேற்படி வாகனம் அல்லது கலம் அல்லது விலங்கு அரசு உடைமையாக்கப்படும்.

## செய்தித் தாள்களில்

## பொய்யான அறிக்கைகளை வெளியிடுதல்

தேர்தல் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒரு கட்சியின் வேட்பாளருடைய உரைகள் அல்லது நடவடிக்கைகள் பற்றி செய்தித்தாள்களில் பொய்யான அறிக்கைககளை வெளியிடுவது தவறாகும். ''செய்தித் தாள்'' என்னும் பதம், சஞ்சிகை, பருவ வெளியீடு எதனையும் உள்ளடக்கும். இத் தவறுகளுக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தொடர்வார். தண்டப் பணம் 100/= ரூபாயாகும். மூன்று ஆண்டுகளுக்குக் குடியியல் உரிமைகள் பறிக்கப்படும்.

இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் மேற்படி பத்திரிகையின் உரிமையாளர், முகாமையாளர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் அல்லது அத்தகைய சமநிலையிற் செயல்படும் ஒவ்வொரு நபரும் தனித்தனியாக தவறு செய்தவர்களாகக் கருதப்படுவார்கள். மேற்படி நடவடிக்கையைத் தடுப்பதற்கு அவர் செயற்பட வேண்டியவாறு முழுமையாகச் செயற்பட்டார் என நிரூபித்தால் மாத்திரமே விடுவிக்கப்பட முடியும். இது தொடர்பாக வழக்குத் தொடருமாறு முறையீடு செய்யப்பட்டாலும், அதற்கு அப்பால் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப படாது இருக்கக் கூடும் என்பதை தேர்தல் ஆணையாளரின் அறிக்கைகள் மூலமும் வேறு அனுபவங்கள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வநீதிகளுக்கு எதிராக தொடர்ந்து முறையீடு செய்வது மூலம் அவற்றைத் தவிர்த்துக் கொள்ள முடியும். வாக்கெடுப்பு தேதியில் நடைபெறும் தவறுகளை தலைமை தாங்கும் உத்தியோகத்தருக்கோ அல்லது பொலிசாருக்கோ முறையிடலாம்.

## தேர்தல் உத்தியோகத்தர்களின் கடமையும் பொறுப்பும்

★ அரச சேவை அல்லது மாகாண அரச சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், அவர்களின் பதவிகளுக்கு அமைய தேர்தல் உத்தியோகத்தர்களாக நியமனம் பெறுவார்கள்.

★ தேர்தல் கடமைகளை மிக நடு நிலைமையோடும் இரகசியம் பேணும் வகையிலும் நிறைவேற்றுதல் அவர்களின் கடப்பாடாகும்.

★ இக் கடப்பாட்டை அவர்கள் ஒரு சத்தியப்பிரமாணம் மூலம் வெளிப்படுத்துகின்றனர். ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சட்டத்தின் "ஓ" படிவத்திற்கு அமைய அவர்கள் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்.

★ வாக்குச் சீட்டு அல்லது உததியோகபூர்வ தேர்தல் சின்னம் அல்லது தேர்தல் நடவடிக்கைகள் பற்றி எவ்வகையிலேனும் தகவலை வெளியிடுதல் மறியல் தண்டனைக்குரிய குற்றமாகும். குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கும் இது காரணமாக அமையலாம்.

***(75 வாசகம்)***

## தேர்தல் தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் கடமைகள்

★ வாக்கெடுப்பு நிலையத்தில் இலகுவாக வாக்களிக்கக் கூடியவாறு அவசியமான சகல அறிவித்தல்களையும் காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

★ ஒவ்வொரு வேட்பாளரின் பெயர், அவருடைய தேர்தல் சின்னம், கட்சியின் பெயர் என்பவற்றை வாக்குச் சாவடிக்கு வெளியே காட்சிக்கு வைத்தல் வேண்டும். இவ் விபரங்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இருத்தல் வேண்டும்.

***(27 வாசகம்)***

★ வாக்கெடுப்பிற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலைய முகவருக்கு தனது உத்தியோகத்தர்களை அறிமுகம் செய்தல் வேண்டும்.

★ வாக்கெடுப்பு காலை 7 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 4மணிக்கு முடித்து வைக்க வேண்டும்

***(30 வாசகம்)***

★ வாக்கெடுப்பு நிலைய முகவர்களின் பெயர்கள், விலாசங்கள், அதிகாரமளிக்கப்பட்ட கடிதங்கள் என்பவற்றை அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்படி முகவர்களுக்கான தேசிய அடையாள அட்டை அல்லது கூட்டுத் தாபன அடையாள அட்டை இல்லாவிட்டால் அவர்களை வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

***(32(3) இ வாசகம்)***

★ காரியாலய பதவியினரிடமும் முகவர்களிடமும் இரகசியம் பேணும் சத்தியப் பிரமாணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்

***(75 வாசகம்)***

★ வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் வாக்குச் சீட்டுக்களையும், உத்தியோகரீதியான இலச்சினை, உத்தியோகரீதியான குறியீடு, வாக்காளர் இடாப்பின் பாகங்களின் பிரதிகள் என்பவற்றை தேர்தல் முகவருக்குக் காட்டுதல் வேண்டும்.

***(34-1-அ-வாசகம்)***

★ வாக்குச்சீட்டுப் பெட்டியைத் திறந்து காட்டிய பின்னர் அதைப் பூட்டி இலச்சினையிட்டு எல்லோரும் பார்க்கக் கூடிய இடத்தில் வைத்தல் வேண்டும்.

***(34-(1)-ஆ-வாசகம்)***

★ தனது தேர்தல் பதவியினர் அதிகாரம் பெற்ற முகவர்கள் தவிர்ந்த வேறு எவரையும் வாக்கெடுப்பு நிலையத்தில் தங்கி இருக்க அனுமதிக்கக் கூடாது.

*(33-ஆ- வாசகம்)*

★ வேட்பாளர் வாக்கெடுப்பு நிலைய முகவர், அதிகாரம் பெற்ற முகவர், பிரதேச முகவர், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள், கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தி யோகத்தர்கள் ஆகியோர் மாத்திரமே வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். இது தொடர்பாக மிக அவ தானமாக நடந்து கொள்ள வேண்டியது தலைமை தாங்கும் உத்தியோ கத்தரின் கடமையாகும். ஆனால் ஒரே நேரத்தில் ஒரு நபருக்கு மாத்திரமே வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசிக்க அனுமதி உண்டு.

★ யாரேனும் வாக்கெடுப்பு நிலையத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் கடமையிலீடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்க ளைக் கொண்டு அத்தகைய நபர்களை வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு தலைமை தாங்கும் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*(33-3 வாசகம்)*

★ எவரேனும் ஒரு வாக்காளரின் ஆள் அடையாளம் பற்றி சந்தேகம் ஏற்பட்டால், அல்லது வாக்கெடுப்பு நிலைய முகவர் ஒருவர் எதிர்ப் புத் தெரிவித்தால் மேற்படி வாக்காளரின் தேசிய அடையாள அட் டையை சமர்ப்பிக்குமாறு கோரலாம்.

அடையாள அட்டை வைத்திருக்காவிட்டால் ஜனாதிபதி ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் சட்டத்தின் ஈ, உ, ஊ. எ ஆகிய படிவங்களை நிரப்பித் தருமாறு கோரலாம். மேற்படி படிவங்களை நிரப்பித்தரக் குறிப்பிட்ட வாக்காளர் மறுத்தால் வாக்குச்சீட்டை தலைமை தாங்கும் உத்தியோக த்தர் வழங்க மறுக்கலாம்.

*(41-(1)(2) வாசகம்)*

★ இடது கை சிறுவிரலில் மை பூசப்படுகின்றதா என அவதானிக்க வேண்டும்.

★ மை பூசுவதற்கு ஒரு வாக்காளர் மறுப்பாராயின் அல்லது ஏற்கனவே அவருக்கு மை பூசப்பட்டிருப்பது தோன்றினால் அவருக்கு வாக்குச் சீட்டு வழங்கப்படக்கூடாது. அவ்வாறு வாக்குச்சீட்டு வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் மேற்படி வாக்காளர்களின் இலக்கம், பெயர், விலாசம் என்பவற்றைக் குறிப்பிட்டு வாக்குச் சீட்டு வழங்கப்படா

மைக்கான காரணத்தையும் குறித்து சட்டத்தின் 'இ' படிவத்திற்கு அமைய ஒரு பட்டியலைத் தயாரித்தல் வேண்டும்.

***(36-(1)(2) வாசகம்)***

★ வாக்காளர் ஒருவர் தனது வாக்குச் சீட்டு தவிர்ந்த வேறு வாக்குச் சீட்டோ அல்லது வேறு பொருட்களையோ வாக்குச் சீட்டுப் பெட்டியினுள் போடுகின்றாரா என அவதானித்தல் வேண்டும். அத்தகைய தவறு செய்பவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

★ எவரேனும் வெளிநபர் அல்லது பொலிஸார் செய்யும் மிரட்டல்களுக்கு அடிபணியக்கூடாது. இத்தகைய மிரட்டல்களுக்கும் தூண்டுதல்களுக்கும் அடிபணிதல் தண்டனைக்குரிய குற்றமாகும். இத்தகைய நடவடிக்கைகள் பற்றி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல் வேண்டும். அதே சமயம் தமது ஆவணங்களில் குறித்துக் கொள்ளவும் வேண்டும்.

★ பாதுகாப்பிற்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்ட ரீதியாகச் செயற்படாவிட்டால், உடனடியாக உரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு, தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களுக்கு, உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு, பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்தல் வேண்டும்.

★ வாக்கெடுப்பு முகவர்கள் முறையீடு செய்வதற்கு சம்பவ ஏட்டைக் கேட்டால் அவர்களின் முறையீடுகளைக் குறித்துக் கொள்வதற்கு அதனைக் கொடுக்க வேண்டும்.

★ வாக்கெடுப்பு முடிவடைந்ததும் முகவர்கள் முன்னிலையில் வாக்குச் சீட்டுப் பெட்டிகளை மூடி இலட்சினையைப் பொறித்தல் வேண்டும். முகவர்களின் இலட்சினைகளைப் பொறிப்பதற்கும் இடமளிக்கப்பட வேண்டும். அதே சமயம், ஒவ்வொரு வாக்குச்சீட்டுப் பெட்டியினதும் திறப்பு, பயன்படுத்தப்படாத அல்லது பழுதடைந்த வாக்குச் சீட்டுக்கள், வாக்குச் சீட்டுகளின் அடி இதழ்கள், வாக்காளர் இடாப்பின் குறியீடு இடப்பட்ட பிரதிகள், கேட்டுப் பெற்ற வாக்குச் சீட்டுப் பட்டியல்களும் தனித்தனியாக இலட்சினை பொறித்து குறிப்பிட்ட படிவங்களில் பதிய வேண்டும். இவற்றில் முகவர்களின் இலட்சினைகளையும் பொறித்தல் வேண்டும்.

***(45 -(1) வாசகம்)***

★ எவரேனும் ஒரு நபரைக் கைது செய்யும்படி கட்டளையிடுதல், வாக்கெடுப்பு நிலையத்தில் இருந்து அகற்றுதல் என்பவை தவிர்ந்த ஏனைய வாக்கெடுப்புக் கடமைகளை தலைமை தாங்கும் உத்தியோகத்தர் தமது உதவி உத்தியோகத்தர்கள் மூலம் செய்ய முடியும்.

***(46 வாசகம்)***

ஒவ்வொரு வாக்குச் சீட்டும் வாக்காளர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் அது உத்தியோகபூர்வமாகத் துளையிடப்பட்டிருக்கிறதா என அவதானித்தல் வேண்டும்.

*(35 (2) இ வாசகம்)*

★ வாக்குச்சீட்டை வாக்காளரிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் வாக்காளரின் இலக்கம், பெயர், விபரங்கள் எல்லோருக்கும் கேட்கத் தக்கதாகக் கூப்பிடுதல் வேண்டும்.

*(35(2) அ -வாசகம்)*

★ வாக்காளரின் இலக்கத்தை வாக்குச்சீட்டின் அடி இதழில் குறிப்பிட்டு, அதிலிருந்து வாக்குச் சீட்டு கிழிக்கப்படுதல் வேண்டும்.

*(35 -(2) ஆ - வாசகம்)*

★ வாக்காளரின் இடது கை சிறுவிரலில் போதியளவு தோதான குறியீட்டு மை பூசப்படுதல் வேண்டும். இவ்வாறு மை பூச வாக்காளர் மறுத்தால் அத்தகைய நபருக்கு வாக்குச் சூட்டு வழங்கக் கூடாது. ஒரு வாக்காளரின் இடது கை சிறுவிரலில் ஏற்கனவே மை பூசப்பட்ட அடையாளம் இருப்பின் வாக்குச் சீட்டு வழங்காது இருக்க அது காரணமாக அமையும்.

★ வாக்காளர் வாக்களிப்பது தொடர்பாக ஆலோசனை கோரினால் வாக்கெடுப்பு முகவர்கள் அனைவரும் காணக் கூடிய, கேட்கக் கூடிய வகையில் மேற்படி ஆலோசனை வழங்கப்பட வேண்டும். ஆனால், குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கோ அல்லது சுயேட்சைக் குழுவிற்கோ வாக்களிக்குமாறு ஆலோசனை வழங்கவோ அல்லது வழிகாட்டவோ கூடாது.

*(38-(1) வாசகம்)*

★ குருட்டுத்தன்மை அல்லது வேறு உடற்குறை காரணமாக வாக்களிக்க முடியாத நிலையில் உள்ள வாக்காளர் உதவி கோரும் போது, தமது பதவியினர்களில் ஒருவரது முன்னிலையில் வாக்காளரின் ஆலோசனைக்கு அமைய தலைமை தாங்கும் உத்தியோகத்தர் வாக்குச் சீட்டில் புள்ளடியிட்டுக் கொடுக்கலாம்.

★ வாக்கெடுப்பை முடிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் பின்னர், வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்தின் உள்ளே இருப்பினும் வாக்குச் சீட்டு வழங்கப்படக் கூடாது. ஆனால் ஏற்கனவே வாக்குச் சீட்டு வழங்கப்பட்ட வாக்காளருக்கு மாத்திரம் வாக்களிக்க அனுமதி அளிக்க வேண்டும்.

*(44 வாசகம்)*

## வாக்கு எண்ணும் நிலைய முகவர்களின் பொறுப்பு

★ குறிப்பிட்ட வேட்பாளரின் அதிகாரம் பெற்ற முகவர் ஒவ்வொரு வாக்கு எண்ணும் நிலையத்திற்கும் ஐந்து பேருக்கு மேற்படாத முகவர்களை நியமனஞ் செய்ய முடியும்.

***(49 வாசகம்)***

★ வாக்குகள் எண்ணும் முகவராகச் செயற்படும் எவரேனும், வாக்குகளை எண்ணத் தொடங்கும் முன்னர் முதலாவது அட்டவணையில் உள்ள 'ங' படிவத்திற்கு அமைய இரகசியம் பேணுவதாகச் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டும்.

***(75 வாசகம்)***

★ தேசிய அடையாள அட்டையை அல்லது அரசாங்கத் திணைக்கள அல்லது அரச கூட்டுத்தாபன அடையாள அட்டையை முகவர்கள் கட்டாயமாக அணிந்திருக்க வேண்டும்.

★ வாக்குகளை எண்ண ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்குச் சீட்டுக்கள் பற்றிய விபரங்களை பார்வையிட்டு அவற்றின் பிரதிகளைப் பெற வேண்டும்.

***(50 (2) வாசகம்)***

★ ஒவ்வொரு வாக்குச் சீட்டுப் பெட்டியைத் திறக்கும் போதும் அதற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலைய முகவர்களிடம் பெற்ற விபரங்களையும், இலட்சினைகளையும் பரிசீலனை செய்ய வேண்டும். ஏதாவது குறைபாடு காணப்பட்டால் உடனடியாக முறையீடு செய்ய வேண்டும்.

★ வாக்குகளை எண்ணும் போது சரியாக வாக்குகள் எண்ணப்படு கின்றனவா, ஒவ்வொரு வாக்குச் சீட்டுகள் அடங்கிய கட்டுக்களிலும் வேறு வேட்பாளர்களுடைய வாக்குச் சீட்டுகள் உள்ளனவா எனப் பரிசீலனை செய்ய வேண்டும்.

★ ஒவ்வொரு வாக்குச் சீட்டுப் பெட்டியையும் திறந்து வாக்குச் சீட்டுக்களை வெளியே எடுத்த பின்னர் அவ்வெண்ணிக்கை பதியப்படு

கின்றதா என பரிசீலனை செய்ய வேண்டும். அதன் பின்னர் வாக்குச் சீட்டுப் பெட்டிகளுள் இருந்து எல்லா வாக்குச் சீட்டுக்களும் ஒன்றாகக் கலக்கப்படுகின்றவனா எனவும் அவதானித்தல் வேண்டும்.

*(50 (2) ஆ- வாசகம்)*

★ வாக்கெண்ணும் உத்தியோகத்தர், வாக்குகளை எண்ணும் பொழுது வாக்குச் சீட்டுக்களின் முகப்பக்கம் மேல் நோக்கி இருக்கும்படி வைத்திருத்தல் வேண்டும். அவற்றின் பின் பக்கத்தில் அச்சிடப்ப ட்டுள்ள இலக்கங்களை ஆளெவரும் காணுதலைத் தடுப்பதற்கான தகுந்த முற்காப்புகள் எல்லாவற்றையும் எடுத்தல் வேண்டும்.

*(50-3 வாசகம்)*

★ வாக்குச் சீட்டுகள் கட்டுக்களாக கட்டப்படும் பொழுது ஒவ்வொரு கட்டிலும் குறிப்பிட்ட வாக்குச் சீட்டுக்கள் மாத்திரம் உள்ளடக்கப்ப டுகின்றதா என அவதானிக்க வேண்டும்.

★ 50 வாக்குச் சீட்டுகள் கொண்ட கட்டுக்களைச் சேர்த்து 500வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட கட்டுக்களாகக் கட்டும் போதுகவனமாக அவதானித்தல் வேண்டும்.

★ ஏதேனும் ஒழுங்கீனம் அவதானிக்கப்பட்டால், உடனடியாக அது பற்றி வாக்கெண்ணுவதற்குப் பொறுப்பான பிரதம உத்தியோகத்த ருக்கு முறையிட வேண்டும்.

★ விசேஷ பிரச்சினைகள் இருந்தால் மீள வாக்கெண்ணும் படி விண்ண ப்பிக்கலாம். (அவ்வாறு நிகழ்த்தப்படக்கூடியதான ஆகக்கூடிய மீள எண்ணல்கள் இரண்டு தடவைகள் மாத்திரமேயாகும்)

*(51 (8) வாசகம்)*

★ வாக்கெண்ணும் உத்தியோகத்தர் அவருடைய பதவியினர் வாக்கெ ண்ணும் முகவர்கள் தவிர வேறு எவரேனும் தெரிவத்தாட்சி உத்தி யோகத்தரின் (அரசாங்க அதிபர்) அனுமதி பெறாமல் வாக்கெடுப்பு நிலையத்தில் பிரவேசிக்க முடியாது.

*(50 -(7) வாசகம்)*

★ வாக்குச் சீட்டு ஒன்றை நிராகரிப்பதற்கு முன்னர் வாக்கெண்ணும் முகவர்களுக்கு அதனைக் காட்டி அவர்களுடைய கருத்துக்களுக்கும் செவிமடுத்து செயற்பட வேண்டியது வாக்கெண்ணும் உத்தியோக த்தருடைய பொறுப்பாகும்.

*(51 (4) வாசகம்)*

★ நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டு நிராகரிக்கப்பட்டது என வாக்கெ ண்ணும் உத்தியோகத்தர் புறக்குறிப்பிடுகின்றாரா என அவதானிக்க வேண்டும்.

*(51 -(1) வாசகம்)*

★ கேட்டுப் பெறும் வாக்குச் சீட்டுக்கள் இருப்பின் ஒவ்வொரு வேட்பா ளருக்கு அமைய வெவ்வோறு பொதிகளில் இட்டு வேட்பாளரின் பெயர் பதியப்பட்டுள்ளதா என அவதானிக்கவும்.

*(50-(6) வாசகம்)*

★ வாக்கெண்ணும் போது வாக்கெண்ணும் நிலையத்தில் இருந்து வெளியேறாது இருப்பதும் உணவுக்காக வேறு இடத்திற்கு செல்லாது இருப்பதும் மிக முக்கியமாகும்.

*(51 -(7) வாசகம்)*

★ ஒவ்வொரு வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகள் எழுத்திலும் இலக்கத்திலும் பதியப்பட்ட தனித்தனிப் பிரகடனங்களை வாக்கெ ண்ணும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இதற்குச் சாட்சியாக அதிகாரம் பெற்ற முகவரும் கையெழுத்திட வேண்டும். இப் பிரகடனத்தின் பிரதிகளைப் பெறும் உரிமை உண்டு.

*(55 (1) வாசகம்)*

# தபால் வாக்குகள்

தபால் மூலம் வாக்களிக்கத் தகைமை உடையோர் அவ்வாறு வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தபால் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் அதிகாரம் யாருக்கு உண்டு?

1. **பாதுகாப்புப் படைகள்** - பாதுகாப்புப் படைத் தலைவர்கள். ஏவுநர் தரத்திலான உத்தியோகத்தரின் பொறுப்பின் கீழ் உள்ள காரியால யத்தில் சேவை செய்பவர்களைப் பொறுத்தவரை மேற்படி ஏவுனர்.

2. **பொலிஸ் திணைக்களம்** - பொலிஸ் பரிசோதகர் அல்லது உதவி பொலிஸ் பரிசோதகர் பொறுப்பில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது பொலிஸ் காரியாலயத்தில்சேவை செய்வோரின் அத்தாட்சி ப்படுத்தும் உத்தியோகத்தராக அரச கசெற்றில் பெயர் பிரகடனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் (சகல உதவி பொலிஸ் அத்தியட்ச கர்கள் அதற்கு உடன் மேலாகப் பொறுப்பைக் கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள்) செயற்படுவார்கள்.

3. **சிறைச்சாலைத் திணைக்களம்.** தலைமைக் காரியாலயத்தில் சிறைச் சாலை ஆணையாளர் அல்லது பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச சபை காரியாலயங்கள் தொடர்பாக அத்தியட்சகர், உபஅத்தி யட்சகர் அல்லது அவற்றிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் செயற்படுவார்கள்.

4. **கல்வி அமைச்சு.** தலைமை அலுவலகம் தொடர்பாக அமைச்சுச் செயலாளர் அல்லது அடுத்தபடியாக உள்ள உதவி உத்தியோகத்தர்கள் காரியாலயங்கள் மாவட்டக் கந்தோர்கள் தொடர்பாக பிரதேசப் பணிப்பாளர்கள், பிரதம கல்வி உத்தியோகத்தர்கள், உதவிக் கல்வி உத்தியோகத்தர்கள். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகளின் விண்ணப் பதாரிகள் தொடர்பாக அவற்றின் அதிபர்கள். இலங்கை கல்வி நிர்வாகச் சேவை உறுப்பினரான கல்லூரி அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பிற ஊழியர்கள் தொடர்பாக மேற்படி பாடசாலை அதிபர்கள் செயற்படுவார்கள்.

5. தெரிவத்தாட்சி உத்தியோகத்தரிடம் பெயர்ப்பட்டியல் சமர்ப்பி த்துள்ள (ஓர் கல்விப் பிரதேசத்தின்) ஏனைய சகல பாடசாலை

ஆசிரியர்கள் தொடர்பாக பதவி நிலை கல்வி உத்தியோகத்தர்கள் செயற்படுவார்கள்.

6. **ஏனைய அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள்** தொடர்பாக அவற்றின் தலைவர்கள் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பிரதேச உப அலுவலகங்கள் தொடர்பாக அவற்றிற்குப் பொறுப்பான பதவி நிலை உத்தியோகத்தர்கள் மேற்படி அலுவலகங்களின் அத்தாட்சிப் படுத்தும் உத்தியோகத்தர்களாகச் செயற்படுவார்கள்.

7. **இலங்கை மத்திய வங்கி** தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் பல்வேறு திணைக்களங்களைச் சேர்ந்த தலைவர்கள் அல்லது ஏனைய பதவி நிலை உத்தியோகத்தர்கள் செயற்படுவார்கள்.

8. **உள்ளூராட்சிச் சேவை** தொடர்பாக கொழும்பு மாநகர சபையைத் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆணையாளர்கள் அல்லது செயலாளர்கள் செயற்படுவார்கள்.

9. **பிரதேச சபைகளில்** பிரதேசச் சபை செயலாளர்கள் செயற்படுவார்கள்.

10. **கொழும்பு மாநகர சபை** தொடர்பாக ஆணையாளர் அல்லது பிரதம பொறியியலாளர் அல்லது உதவிப் பொறியியலாளர்கள் அல்லது மாநகர சபையின் ஒவ்வொரு திணைக்களத்தலைவர்கள் செயற்படுவார்கள்.

11. **கூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள்** தொடர்பாக அவற்றின் பணிகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்கள் மேற்படி நிறுவனங்களின் பொது முகாமையாளர்களால் அத்தாட்சிப் படுத்தப்படுவார்கள்.

12. தேர்தல் கடமைகளுக்காக விடுவிக்கப்படும் கூட்டுத்தாபனங்களுக்குச் சொந்தமான சாரதிகள், துப்பரவாக்குநர் தொடர்பாக தலைமை அலுவலகமாயின் பொது முகாமையாளர் அல்லது அவரது உதவியாளர்களான பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச மாவட்ட அலுவலர்களாயின் அவற்றின் முகாமையாளர்கள் செயற்படுவார்கள்.

## தபால் மூலம் எவ்வாறு வாக்களிப்பது?

★ தபால் மூலம் வாக்களிக்க அனுமதிப்பதா அல்லது அனுமதி மறுப்பதா எனத் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் தீர்மானித்து அதனை உடனடியாக அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தருக்கு ஒரு பிரதியுடன் விண்ணப்பதாரிக்கு அறிவிப்பார்.

★ அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு பின்வரும் ஆவணங்களை வழங்குவார்.

1. வாக்குச் சீட்டு
2. ஆளடையாள வெளிப்படுத்துகைப்படிவம்,
3. புள்ளடியிட்ட பின்னர் வாக்குச் சீட்டை அனுப்ப வேண்டிய வாக்குச் சீட்டு மேலுறை (B மேலுறை)
4. மேற்கூறிய ஆவணங்களை தெரிவத்தாட்சி உத்தியோகத்தருக்குத் திருப்பி அனுப்பி வைக்க வேண்டிய மேலுறை (A மேலுறை)

**மேற்படி ஆவணங்களைக் கொண்ட மேலுறையை திறப்பதற்கு முன்னர்**

★ மேற்படி மேலுறையில் தமது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா?

★ இலச்சினைகள் உரிய முறையில் பொறிக்கப்பட்டுள்ளனவா?

**மேலுறையைத் திறந்து ஆவணங்களை வெளியே எடுத்த பின்னர்,**

★ ஆள் அடையாளம் பிரகடனப்படுத்தும் படிவத்திலும் வாக்குச் சீட்டு மேலுறையிலும் ( B மேலுறை) உள்ள தொடர் இலக்கத்தையும் வாக்குச் சீட்டின் பின்புறம் உள்ள இலக்கத்தையும் உரிய முறையில் பரிசீலனை செய்யுங்கள்.

★ உத்தியோகபூர்வமான குறியீடு மூலம் வாக்குச் சீட்டு துளையிடப் பட்டுள்ளதா எனப் பரிசீலனை செய்யுங்கள்.

★ அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் முன்னிலையில் ஆள் அடை யாளப் பிரகடனத்தை நிரப்பி கையெழுத்திடுங்கள்.

★ வாக்குச் சீட்டை இரகசியமாகப் புள்ளடியிடுங்கள்.

★ B மேலுறையைப் பெற்றுக் கொண்டு தாமே வாக்குச்சீட்டை அதனுள் இட வேண்டும்.

★ அதன் பின்னர் மேற்படி மேலுறை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத் தரதும், தமதும் முன்னிலையில் இலச்சினை பொறிக்கப்பட வேண்டும்.

★ B மேலுறையையும், ஆள் அடையாளப் பிரகடனத்தையும் மேற்படி மேலுறையில் இட்டு ஒட்டி அதனை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோக த்தரிடம் ஒப்படைக்கவும்.

★ இந்த மேலுறையை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர் தாமே ஒப்படைத்தல் வேண்டும், அல்லது அண்மையில் உள்ள தபால் நிலையத்திடம் ஒப்படைத்து தபால் நிலைய அதிபரிடம் உரிய பற்றுச் சீட்டைப் பெற்றுத் தம் வசம் வைத்திருத்தல் வேண்டும்.

★ தபால் மூலம் வாக்களித்த ஒரு நபர் வேறு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களித்தல் சிறைத் தண்டணை பெறுவதற்குரிய குற்றமாகும்.

# பொலிஸ் உத்தியோகத்தரிகளின் கடமைகளும் பொறுப்புகளும்.

★ தேர்தல் சட்டத்திற்கு அமைய நீதியான சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது சகல பொலிஸ் உத்தியோகத்தர்களினதும் கடமையாகும்.

★ தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகளுக்கு உதவுவது பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமையாகும்.

★ இந்த நடவடிக்கைகளின் போது நடுநிலை வகிப்பதுடன் சட்டத்திற்கு அமைய செயற்படுவது பொலிசாரின் பொறுப்பாகும்.

★ பொலிஸ் உத்தியோத்தர்கள் கட்சிச்சார்பாக நடந்து கொள்வதும், அநீதியாக நடந்து கொள்வதும் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின்படி தவறாகும். அதே சமயம் தேர்தல் சட்டத்தின்படி தவறு செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பாக வேலை நீக்கம் செய்யவும், சிறைத் தண்டனை விதிக்கவும், குடியியல் உரிமையை இரத்து செய்யவும் முடியும்.

★ **தமது உயர் உத்தியோகத்தர்களின் கட்டளைப்படியேனும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தவறு செய்வது குற்றமாகும்.**

★ சட்ட விரோதமான செல்வாக்கிற்கு அல்லது தூண்டுதலுக்கு அல்லது பௌதீக அல்லது மானசீகரீதியாக இலஞ்சத்திற்கு கட்டுப்படுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

★ வாக்கெடுப்பு நிலையத்தின் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தலைமை தாங்கும் உத்தியோகத்தரின் பணிப்புரைகளுக்கு அமைய மெயற்பட வேண்டும்.

★ வாக்கெடுப்பு நிலையத்திற்கு அப்பால் 1/2 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வாக்களிக்குமாறு இரந்து கேட்டல், பாதாகைகளைக் காட்சிக்கு வைத்தல், வாக்களிக்க வருகை தரும் வாக்காளரை அநாவசியமாகத் தூண்டல் அல்லது செல்வாக்குச் செலுத்துதல் போன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ அரசியல் அதிகாரம் அல்லது உத்தியோக அதிகாரம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமல் தேர்தல் சட்டத்தை மீறுவோரைக் கைது செய்ய பொலிசார் கடமைப்பட்டுள்ளனர். அவ்வாறு செயற்படாவிட்டால் அது தவறாகும்.

★ தேர்தலுக்கு முன்னர் பிரசார நடவடிக்கைகள் தேர்தல் சின்னங்களை காட்சிக்கு வைத்தல் போன்ற நடவடிக்கைகளில் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டிருந்தால், அரசியல் அதிகாரம் உத்தியோக அதிகாரம் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாமல் சட்ட விரோத நடவடிக்கை களைத் தடுப்பது பொலிசாரின் கடமையாகும்.

★ தேர்தல் சட்டத்தை மீறுவோருக்கு மறைமுகமாகவேனும் உதவுதல் பாரதூரமான குற்றமாகும். ஆகவே பொலிசார் அவ்வாறு நடந்து கொண்டால் தமது தொழிலை இழக்கவும், சிறைத்தண்டணை அனுபவிக்கவும் நேரிடும்.

★ தவறு செய்த ஒரு நபர் இல்லாதவிடத்து அவரின்சார்பில் மற்றுமொரு நபரை கைது செய்தல், அல்லது தடுத்து வைத்தல் சட்டவிரோதமான நடவடிக்கையாகும். அத்தகைய சம்பவங்கள் நிரூபிக்கப்பட்டால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தண்டணை விதிக்கப்படும்.

★ எவரேனும் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து ஏதேனும் முறை யீடு செய்தால் அதைப் பதிவு செய்வது பொலிசாரின் கடப்பாடு ஆகும். முறையீட்டை பதிவு செய்ய மறுப்பது தவறாகும். அவ்வாறு பதியும் முறையீட்டை குறிப்பிட்ட நபருக்கு வாசித்து விளக்கு வதற்கும், அவ்வாறு விளக்கிய பின்னர் முறையீட்டாளரின் சுய விருப்பின் பேரில் அவரிடம் கையொப்பம் வாங்குவதும் பொலி சாரின் கடமையாகும்.

★ எத்தகைய தவறு செய்தவரையும் உயர் உத்தியோகத்தர்கள் அரசியல் வாதிகள் என்போரின் கட்டளைகளுக்கு அமைய பொலிசார் தாக்கக் கூடாது. அவ்வாறு தாக்குவது குற்றமாகும். பொலிசார்தமது தொழிலை இழப்பதற்கும் இது காரணமாக அமையலாம்.

★ அரசியல் யாப்பிற்கு அமையவும் பொலிஸ் கட்டளைச் சட்டத்திற்கு அமையவும், சட்டரீதியாகவும் தேவைக்கு ஏற்பவுமே பொலிசார் செயற்பட வேண்டும். இவற்றை மீறி அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவது சட்ட விரோதமாகும். தண்டனைக்குரிய குற்றமாகும்.

# ஒலிபெருக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது பொலிசார் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள்.

முழு இலங்கையிலும் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கான ஒலிபெருக்கிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை பொலிஸ் தலைமை அலுவலகமே வழங்கும்.

ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் தகைமையுடையோர்

1. மாண்புமிகு ஜனாதிபதி
2. கௌரவ பிரதம மந்திரி மந்திரிசபை உறுப்பினர்கள்
3. தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் தலைவர்கள்.

பிரதேச அமைப்பாளர்கள் ஒழுங்கு செய்த பொதுக் கூட்டங்களில் உரையாற்றுவதற்கு வழங்கப்பட்ட ஒலிபெருக்கி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லை முடிந்திருந்தாலும், பொலிஸ் தலைமை அலுவலகம் வழங்கும் அனுமதிப்பத்திரம் மூலம் பொதுக் கூட்டத்தில் காலவரையறை இன்றி உரையாற்ற முடியும்.

இவ்வனுமதிப்பத்திரம் 1994.11.06 நள்ளிரவு 12.00 மணிக்குப்பின் இரத்தாகும்.

**இவ்வனுமதிப்பத்திரங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.**

(அ) பொலிசாரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் ஏற்கனவே ஒரு பொதுக்கூட்டம் தமது கேட்கும் எல்லையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், பின்னையவர் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தக் கூடாது.

(ஆ) ஒலிபெருக்கி மூலம் வெளியாகும் சத்தம் கூடுதலாயின் அல்லது பொது மக்களுக்கு இடையூறாயின் சத்தத்தைக் குறைக்குமாறு உதவிப் பொலிஸ் பரிசோதகர் தரத்திற்குக் குறையாத உத்தியோகத்தர் எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலம் கட்டளை இடுவர். அக் கட்டளைக்கு அமைய சத்தத்தைக் குறைக்க வேண்டும்.

(இ) மேற்குறிப்பிட்ட கட்டளையை மீறிச் செயற்பட்டால், உதவிப் பொலிஸ் பரிசோதகர் தரத்திற்குக் குறையாத ஒரு உத்தியோகத்தர்

ஒலிபெருக்கியை நிறுத்திவிடுமாறு கட்டளை பிறப்பிப்பார். அச் சமயத்தில் ஒலிபெருக்கி உடனடியாக நிறுத்திவிட வேண்டும்.

(ஈ) ஒலிபெருக்கியைப் பாவிக்கும் நபர் பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் 79 (2) வாசகத்தை மீறும் வகையில் அச்சுறுத்தும், இழிவு செய்யும், வன்முறையைத் தூண்டும் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.

(உ) ஒலி பெருக்கியைப் பகிரங்க தெருக்களில் பயன்படுத்தக் கூடாது. ஒரு தனிப்பட்ட காணிச் சொந்தக்காரரின் முன் அனுமதியோடு மேற்படி காணியிலேயே அதனைச் செயற்படுத்த வேண்டும். மேற்படி காணிச் சொந்தக்காரரின் அனுமதியை பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரியின் பரிசீலனைக்குத் தயாராக வைத்திருத்தல் வேண்டும்.

(உ) எந்தவொரு இடத்திலும் எந் நேரத்திலும் ஒலிபெருக்கியைப் பயன் படுத்துவதை நிறுத்தும், பொதுமக்கள் மத்தியில் சமாதானத்தைப் பேணக்கூடிய வகையில் மேலதிக நிபந்தனைகளை விதிப்பதற்கு பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சகல உரிமைகளும் உண்டு.

**மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் ஒலிபெருக்கியைப் பாவிப்பதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள்**

1. 19994.11.06ஆந் திகதி இரவு 10 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கி அனுமதிப் பத்திரங்களை வழங்காது இருக்கும் நிபந்தனைகளு க்குமைய இரவு 10 மணி வரை மாத்திரம் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்.
2. குறிப்பிட்ட மாவட்டப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகருக்கு/ உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம் உண்டு.
3. தேர்தலில் போட்டியிடும் சகல அரசியற் கட்சிகளும் அல்லது சுயே ட்சை வேட்பாளர்களும் அனுமதிப் பத்திரம் கோரி விண்ணப்பிக்க முடியும்.
4. அனுமதிப் பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். (அ) திகதி, (ஆ) நேரம், (இ) இடம், (ஈ) உரையாற்று வோரின் பெயர்ப்பட்டியல்.
5. இரவு 10 மணிக்குப் பின்னர் அனுமதிச் சீட்டு செல்லுபடி ஆகாது.

**பொதுக் கூட்டங்களிலும், பொதுக் கூட்டங்களைப் பற்றிய பிரசார ங்களில் ஈடுபடும் போதும் பின்வரும் நிபந்தனைகளுக்கமையவே ஒலிபெருக்கி களைப் பாவிக்க அனுமதிக்கப்படுவார்கள்.**

(அ) ஒலிபெருக்கியை எடுத்துச் செல்லும் வாகனத்தின் பதிவு இலக்கம் அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(ஆ) ஒலிபெருக்கியின் மூலம் வெளியாகும் சத்தத்தின் அளவு கூடுதலா யிருக்கிறது அல்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துகின்றது என உதவிப் பொலிஸ் பரிசோதகர் தரத்திற்குக் குறையாத ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கருதுவாராயின் மேற்படி உத்தியோக த்தரின் வாய்மொழி மூலமான அல்லது எழுத்து மூலமான கட்ட ளைக்கு அமைய ஒலிபெருக்கியின் சத்தத்தைக் குறைக்க வேண்டும்.

(இ) ஒலிபெருக்கியை பயன்படுத்துவோர், பொலிஸ் கட்ளைச்சட்டத்தின் 79(2) வாசகத்தை மீறக்கூடிய வகையில் அச்சுறுத்தும் இழிவு செய்யும், வன்முறையைத் தூண்டும் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.

(ஈ) மேலே (ஆ) ல் குறிப்பிட்ட கட்டளைகளை மீறினால் உதவிப் பொலிஸ் பரிசோதகர் தரத்திற்குக் குறையாத பொலிஸ் உத்தியோகத்தர் ஒலி பெருக்கியை நிறுத்துமாறு கட்டளை இடலாம். அப்போது ஒலி பெருக்கியை உடனடியாக நிறுத்த வேண்டும்.

(உ) பொதுக்கூட்டம் நடத்தப்படும் இடம், அங்கு வருகை தரும் மக்கள் ஒன்றுகூடுவதற்குப் போதிய இடவசதி உள்ளது எனப் பொலிசார் திருப்தி அடைய வேண்டும்.

(ஊ) பொதுக்கூட்டம் நடத்தப்படும் இடம் பெருந்தெருவிற்கு அண்மை யில் அமைந்திருந்தால் வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட மாட்டாது எனப் பொலிசார் திருப்தி அடைய வேண்டும்.

(எ) பொலிசார் வழங்கிய அனுமதிப்பத்திரத்தின் கீழ் நடத்தப்படும் வேறு ஒரு பொதுக் கூட்டம் கேட்கும் எல்லையில் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டிருந்தால், ஒலிபெருக்கி பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

(ஏ) ஒலிபெருக்கி பகிரங்கத் தெருவில் செயற்படுத்தக்கூடாது. தனிப்பட்ட காணி உரிமையாளரின் அனுமதியோடு அது குறிப்பிட்ட காணியில் செயற்படுத்தப்பட வேண்டும். மேற்படி அனுமதிப்பத்திரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பரிசீலனைக்குத் தயாராக வைத்தி ருத்தல் வேண்டும்.

(ஐ) எத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலும் எந்த ஒரு இடத்திலும் ஒலிபெருக்கி களைப் பாவிப்பது பொதுமக்கள் மத்தியில் சமாதானத்தைக் குலைப்ப தற்கு காரணமாக அமையும் எனத் தோன்றினால் கூடிய நிபந்தனை களை விதிப்பதற்குப் பிரதேச பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதி காரிக்கு உரிமை உண்டு.

(ஒ) பொதுத்தெருக்களைப் பயன்படுத்துவோருக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஒலிபெருக்கிகளைச் செயற்படுத்தக் கூடாது.

(ஓ) ஒலீபெருக்கியை இணைக்கும் வாகனத்திற்குப் பொறுப்பானவர்தான் ஒலிபெருக்கியைப் பயன்படுத்த உத்தேசிக்கும் போக்குவரத்து மார்க்கம், பொதுக்கூட்டம் நடத்தும் இடம் என்பவற்றை எழுத்து மூலம் குறிப்பிட்டு பொலிஒ நிலையத்திற்குச் சென்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

(ஔ)தேர்தல் நடைபெறும் தேதிக்கு 48 மணித்தியாலத்திற்கு முன்பாக பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி கிடையாது. 1994.11.08 இரவு 10 மணிக்குப் பின்னர் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி வழங்க ப்பட மாட்டாது.

**அனுமதிப்பத்திரம் கோரிய விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் தொடர்பாக பொலிசார் அமுல்படுத்த வேண்டிய நடைமுறைகள்.**

1. விண்ணப்பபத்திரம் கிடைத்தவுடன் திகதிமுத்திரை இடப்பட வேண் டும்.
2. விண்ணப்பம் கிடைக்கப்பெற்ற நேரம் குறிப்பிடப்பட வேண்டும்.
3. பொதுக்கூட்டம் நடைபெறும் திகதி, இடம், நேரம் எனத் தலைப்பு கள் ஒதுக்கப்பட வேண்டும்.
4. வேட்பாளரின் பெயர் அரசியல் கட்சி என்பன குறிப்பிடப்பட வேண்டும்
5. அனுமதி வழங்கப்பட்டதா இல்லையா எனக் குறிப்பிடப்பட வேண்டும்
6. குறிப்பிட்ட மாதத்தின் ஒவ்வொரு தேதிக்கும் பதிவேட்டில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட வேண்டும்.
7. உதவிப் பொலிஸ் அத்யட்சகருக்கு அனுமதிப்பத்திரம் வழங்குமாறு சிபாரிசு செய்ய முன்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பாளர் இப் பதிவேட்டைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

*(1994 நவம்பர் 04 ஆந் திகதி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விநியோகிக்கப்பட்ட வழிகாட்டிக்கு அமைய தயாரிக்க ப்பட்டது)*